இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

ஆண்டறிக்கை 2021

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

ஆண்டறிக்கை 2021

இது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டின் செயற்பாடுகள் தொடர்பான ஆண்டறிக்கையாகும். இவ்வறிக்கையானது 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 30 ஆவது பிரிவிற்கமைய சமர்ப்பிக்கப்படுகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

தலைமை அலுவலகம்

இல. 14, ஆர் ஏ டி மெல் மாவத்தை கொழும்பு 04.

தொ.பே.: (94) 0112505580, 2505581, 2505582

தொலைநகல்: (94) 0112505541

மின்னஞ்சல்: sechrcsl@gmail.com

இணையத்தளம்: www.hrcsl.lk

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் சபை - 2021

தவிசாளர்

கலாநிதி ஜகத் பாலசூரிய

(01.01.2021 முதல் 01.10.2021 வரை)

நீதியரசர் ரோஹிணி மாரசிங்க

(17.12.2021 முதல்)

ஆணையாளர்கள்

மருத்துவர் எம்.எச்.நிமல் கருணாசிரி

கலாநிதி விஜித்த நாணாயக்கார

செல்வி அனுசுயா சண்முகநாதன்

திரு.எச்.கே.நவரத்ன வேரதூவ

(01.01.2021 முதல் 01.10.2021 வரை)

சங்கைக்குரிய களுபஹன பியரத்தன தேரர்

(17.12.2021 முதல்)

தவிசாளரின் ஆசிச் செய்தி

கொவிட் - 19 தொற்று நோயின் இரண்டாம் வருடமான 2021 ஆம் ஆண்டில் முன்னொருபோதுமில்லாதவாறு பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. சமூகத்தில் அனைத்துப் பிரிவினரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்த போதிலும் முக்கியமாக ஒதுக்கப்பட்ட விளிம்பு நிலையில் மற்றும் ஆபத்துக்குட்பட முடியுமான பிரஜைகளின் மனித உரிமைகள் மீது தாக்கம் செலுத்தி கட்டமைப்பு ரீதியில் ஏற்றத்தாழ்வுகளை உக்கிரமடையச் செய்தது.

அவ்வாறான சவால்களுக்கு மத்தியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முனைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு மனித உரிமைகள் துறையில் அழுத்தம் கொடுக்க முடியுமான வகையிலான தலையீடுகளை மேற்கொண்டது. மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் விருத்தி செய்யும் ஆணைக்குழுவின் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும்போது ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தும் சம்பிரதாயபூர்வமான ஆனாலும் அத்தியாவசியமான வெளியீடான ஆண்டறிக்கையை வெளியிடும்போது அதற்காக எனது ஆசிச் செய்தியை வழங்குதல் சம்பந்தமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் என்ற வகையில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

மீளாய்வாண்டில் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அநேகமான அலுவல்களிடையே தீர்க்கமான சில தலையீடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. தொற்று நோய் காலப் பகுதியினுள் மனித உரிமைகளை மேம்படுத்தும் முயற்சிகளின்போது ஆணைக்குழு கொவிட் - 19 தொற்று நோய் பரவலைத் தடுப்பதற்கான தேசிய நிலையத்தின் பிரதானிக்கு 11 விடயங்களைக் கொண்ட வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுத்தது. கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகளின் உரிமைகள், அவர்களுடைய நெருங்கிய குடும்பபாதுகாவலர்கள், இயலாமையுடைய நபர்களை கவனித்துக்கொள்பவர்கள் மற்றும் வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் தேவையான நலனோம்புகை தரங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக இந்த வழிகாட்டல்களில் உள்ளடக்கப்பட்டது.

கொவிட் 19 தொற்று நோய்க்காக பெற்றுக்கொடுக்கப்படும் தடுப்பூசியை வழங்கும் செயற்பாட்டின்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்றை அனுப்பி கொவிட் தொற்று நோயாளிகளுடன் நேரடியாக தொடர்புபடும் ஊழியர்களுக்கு தடுப்பூசியை பெற்றுக்கொடுப்பதற்கு முன்னுரிமை வழங்கும் முறையொன்றை ஏற்படுத்துமாறு பரிந்துரை செய்தது.

கொவிட் - 19 தொற்று நோய் காலப் பகுதியில் கைது செய்யப்பட்டிருக்கும் கைதிகளுக்கு அவர்களுடைய சட்டத்தரணிகள் மற்றும் உறவினர்களை சந்திப்பதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளதனை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினாலும் அவதானிக்கப்பட்டது. அவர்களுக்கு போதுமானளவு நலனோம்புகை வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. பொலீஸ் கைதில் இருக்கும் கைதிகளின் உரிமைகள் மற்றும் நலனோம்புகை வசதிகளை உறுதி செய்வதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு பொலீஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்ததுடன், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுபவர்களுக்கு பாகுபாடின்றி தனிமைப்படுத்தல் வழிகாட்டல்களுக்கமைய சமமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆணைக்குழுவினால் பொலீஸ் மா அதிபரிடம் வேண்டிக்கொள்ளப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இலங்கையில் வீட்டு எரிவாயு அடுப்புக்கள் வெடித்த சில சம்பவங்கள் அறிக்கைப்படுத்தப்பட்டன. நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை, இலங்கை தரப்படுத்தல் பணியகம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லிட்ரோ எரிவாயு கம்பனி மற்றும் லாப் எரிவாயு கம்பனி ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மனித உரிமைகள் ஆணைக்குழு இந்தப் பிரச்சினை சம்பந்தமாக துரிதமாக விசாரணைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட தரப்புக்களுக்கு இழப்பீட்டைச் செலுத்துவதற்குப் பரிந்துரை செய்யப்பட்டது.

பொலீஸ் கைதில் இருக்கும் கைதிகளின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதிப்படுத்தல் பொலீஸ் திணைக்களத்தின் அடிப்படைப் பொறுப்பு என்பதனால் கைதில் இருக்கும்போது ஏற்படும் மரணங்கள் மற்றும் சித்திரவதை சம்பந்தமாக பொலீஸ் மா அதிபரிடம் வினவப்பட்டது. அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தவறுவதனால் நாட்டில் சட்டத்தின் ஆதிக்கம் சம்பந்தமாகபொது மக்களின் நம்பிக்கை குறைவடைவதற்கு காரணமாக அமைவதன் காரணமாக கைதிகளின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கான தேவைப்பாட்டை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வலியுறுத்தப்பட்டது.

2018 - 2020 காலப் பகுதியினுள் நடாத்தப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறைச்சாலைகள் தொடர்பான ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக பின்னூட்டலை மேற்கொள்வதற்காக நீதி அமைச்சின் செயலாளர், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஆகியோர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டனர். அதன் பெறுபேறாக, அந்த அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்வதற்காக செயற்பாட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

மீளாய்வாண்டில் சிவில் சமூக அமைப்புக்களுடனான தொடர்புகளை பலப்படுத்தலை முன்னுரிமையளிக்கப்பட வேண்டிய விடயமாக கவனத்திற்கொள்ளப்பட்டது. அதற்கமைய ஆணையாளர்கள் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, மாத்தறை, மன்னார் மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களின் சிவில் சமூக அமைப்புக்களை சந்திக்கச் சென்றனர். கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக மேற்கொள்ளப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக தனிநபர் ஆலோசனைகளை மேற்கொள்ள முடியாவிட்டாலும் சிறு குழுக்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவை பயன்மிக்கவைகளாக இருந்தமையைக் காண முடியுமாக இருந்தது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு முக்கிய தலையீடு, அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்துக்கொள்ளல் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையைத் திருத்தியமைப்பதற்காக கல்வி அமைச்சின் செயலாளருக்கு முன்மொழியப்பட்ட பரிந்துரைகளாகும். 'வதிவிடம்' பிரிவின் சதவீதத்தை 60% வரை அதிகரித்தல் மற்றும் 'பழைய மாணவர்' பிரிவின் சதவீதத்தை 15% வரை குறைத்தல் என்பன அதில் உள்ளடங்கும். கனி'ÊÊட பாடசாலைகளுக்கு அனுமதித்துக்கொள்ளும் செயற்பாட்டின்போது ஏற்படும் அனைத்து விதமான பாகுபாடுகள் மற்றும் அடிப்படை உரிமை மீறல்களை இல்லாதொழிப்பதற்காக நிரந்தர வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் ஆணைக்குழு கருதுகின்றது.

ஐரோப்பா சங்கத்தினால் வழங்கப்படும் GSP+ சலுகை சம்பந்தமாக மீளாய்வொன்றும் இந்த ஆண்டில் நடாத்தப்பட்டது. இலங்கைக்கு வருகைதந்த பிரதிநிதிகள் குழு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சந்தித்து கொவிட் - 19 தொற்று நோய் நிலைமைக்கு மத்தியில் முகங்கொடுக்கும் அனைத்து விதமான சவால்களிலும் மனித உரிமைகள் தொடர்பான பிரிவுகளின் நிலைமை சம்பந்தமாக கருத்துக்களைக் பரிமாறிக் கொண்டனர். தொழிலாளர் உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் சம்பந்தமாக தொழிலாளர் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்களுடன் தொடர்பான சிக்கல்கள் சம்பந்தமாகவும் ஐரோப்பா சங்கத்தின் பிரதிநிதிகள் கவனத்தைச் செலுத்தினர்.

மூன்றாம் தரப்பினால் கிடைக்கப்பெற்ற அறிக்கைகளின் அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 'A' தர தேசிய மனித உரிமைகள் நிறுவனமொன்றாக 2021 ஒக்தோபர் மாதத்தில் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டமைப்பினால் விசேட மீளாய்வொன்றுக்கு உட்படுத்தப்பட்டது. அதன் பெறுபேறாக தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டமைப்பு சட்டக்கோவையின் 18.1 உறுப்புரைக்கமைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை "B" தரத்திற்கு தரமிறக்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சவாலுக்குட்படுத்தியதுடன், தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டமைப்பினால் இதுவரை நிரந்தரத் தீர்மானமொன்று எடுக்கப்படாததுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அலுவல்களை உள்ளடக்கியவாறு தனது ஆண்டறிக்கையை தயரிப்பதற்கு முடியுமாக இருந்தமை சம்பந்தமாக பெருமிதமடைவதுடன், 2021 ஆம் ஆண்டில் இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு மற்றும் பாதுகாப்பதற்கான அத்தியாவசியமான முயற்சிகளின்போது ஆணைக்குழுவின் அலுவல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்துத் தரப்புக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்கு இதனை சந்தர்ப்பமாகக் கொள்கின்றேன். இலங்கை அரசாங்கம், சிவில் சமூக அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் அமைப்பின் முகவர் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுக் குழுக்கள் நாட்டில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொண்ட அயராத ஒத்துழைப்புக்கு நாம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி,

நீதியரசர் ரோஹிணி மாரசிங்க
தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

உள்ளடக்கம்

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் சபை

தவிசாளரின் ஆசிச் செய்தி

உள்ளடக்கம்

தலைப்பெழுத்துச் சொல் பெயர் பட்டியல்

2021 ஆம் ஆண்டில் இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை

அத்தியாயம் 1 : ஆணைக்குழு 13

1.1 ஆணைக்குழு பற்றிய விபரம் 13
1.1.1 தூர நோக்கு 13
1.1.2 செயற்பணி 13
1.1.3 அடிப்படைப் பெறுமதிகள் 13
1.1.4 மூலோபாய ரீதியில் கவனம் ஈர்க்கப்பட வேண்டிய பகுதிகள் 13
1.1.5 ஆணைக்குழுவின் இலச்சினை 14
1.2 ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் தன்மை மற்றும் விடயப் பரப்பு 14
1.3 நிறுவனக் கட்டமைப்பு 16

அத்தியாயம் 2 : புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள் 19

2.1 அறிமுகம் 19
2.1.1. சேவை முறைகளை பலப்படுத்தல் 19
2.1.1 மனித உரிமைகள் தகவல் முறைமையை (HURIN) ஆரம்பித்தல் 20
2.1.3 மேன்முறையீட்டுப் பொறிமுறையொன்றை அறிமுகஞ்செய்தல் 20
2.1.4 2021 இல் முறைப்பாடுகளைக் கையாளுதல் 20
2.1.5 2021 இல் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் 21

2.2 பரிந்துரைகள் 25
2.3. விசேட புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள் 26
2.3.1. அனுராதபுரம் சிறைச்சாலையில் ஏற்பட்ட நிகழ்வுகள் தொடர்பான புலனாய்வுகள் 26
2.3.2. கைதின்போதான மரணங்கள்
2.3.3. வீட்டு எல் gP (LP) எரிவாயு அடுப்பு 26
வெடித்தல் தொடர்பான புலனாய்வு 27

2.4. ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதி காக்கும் படையில் இலங்கை இராணுவத்தினரைப் பற்றிய சோதனை 27

2.5. ஆணைக்குழு சொந்தப் பிரேரணைகளின் அடிப்படையில் மேற்கொண்ட விசாரணைகள் 28
2.5.1. நிகழ்வு இலக்கம் : HRC/SUO/MOTU/01/21 29
2.5.2. நிகழ்வு இலக்கம்: HRC/SUO/MOTU/04/21 29
2.5.3. நிகழ்வு இலக்கம்: HRC/SUO/MOTU/06/21 29
2.5.4. நிகழ்வு இலக்கம்: HRC/SUO/MOTU/08/21 29
2.5.5. நிகழ்வு இலக்கம்: HRC/SUO/MOTU/09/21 30
2.5.6. நிகழ்வு இலக்கம்: HRC/SUO/MOTU/07/21/V 30
2.5.7. நிகழ்வு இலக்கம்: HRC/MTR/SUO/MOTU/08/21/G 30
2.5.8. நிகழ்வு இலக்கம்: HRC/SUO/MOTU/1//09/23/2021(S) 31

2.6. கூட்டங்கள் 31
2.6.1. சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்துடனான கலந்துரையாடல் 31
2.6.2. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இருக்கும் கைதிகள் சம்பந்தமாக 2021.12.29 ஆம் திகதி பொலீஸாருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் 32

அத்தியாயம் 3 : ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை

3.1. அறிமுகம் 34
3.2. தேசிய சிறைச்சாலைகள் தொடர்பான ஆய்வு 34
3.3. விசேட மேற்பார்வை மற்றும் தலையீடுகள் 34
3.3.1. "புரவி" சூறாவளி காணரணமாக இடம்பெயர்ந்த மக்கள் 34
3.3.2. பெருந்தோட்டப் பகுதி மக்களின் உரிமைகள் 35
3.3.3. அகதிகளின் உரிமைகள் 35
3.3.4. வீட்டுப் பணியாளர்களாக சிறுவர்களை ஈடுபடுத்துவதனை இல்லாதொழித்தல் 36
3.4. தடுப்பு நிலையங்கள் மற்றும் பராமரிப்பு இல்லங்களை மேற்பார்வை செய்தல் 37
3.4.1. தடுப்பு ஆணைகளைப் பதிவு செய்தல் 38
3.5. கொவிட் - 19 தடுப்பூசிக்கு முன்னுரிமை அளித்தல் 39
3.6. தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறும் நபர்களைக் கைது செய்தல் தொடர்பான வழிகாட்டல்கள் 39
3.7. கொவிட் - 19 தொற்று நோயிலிருந்து கைதிகளைப் பாதுகாத்தல் பற்றிய பரிந்துரைகள் 39

அத்தியாயம் 4 : கல்வி மற்றும் வெளிவாரியான செயற்பாடுகள்

4.1. அறிமுகம் 40
4.2. சர்வதேச ஞாபகார்த்த தின வைபவங்கள் 40
4.2.1. சித்திரவதைக்கு ஆளானோருக்கு உதவி வழங்கும் சர்வதேச தினம் - 2021 40

4.2.2. சர்வதேச மகளிர் தினம் 41
4.2.3. சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2021 41
4.3. மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சித் திட்டங்கள் 41
4.3.1. விழிப்புணர்வூட்டல் திட்டங்கள் 43
4.4. ஏனைய அரச நிறுவனங்கள் / நிகழ்ச்சித் திட்டங்களுடன் அறிவைப் பகிர்ந்துகொள்ளல் 44
4.5. ஊடகங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளல் 45
4.5.1. இணையவழித் தளங்கள் மற்றும் துரித அழைப்பு முறைகளைப் பயன்படுத்தல் 46
4.6. சிவில் சமூக அமைப்புக்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளல் 46
4.6.1. பிரதேச சிவில் சமூக அமைப்புக்கள் ஒருங்கிணைப்புக் குழு 47
4.6.2. சிவில் சமூக அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட வைபவங்களில் பங்கேற்றல் 47
4.6.3. சிவில் சமூக அமைப்புக்களுக்குப் பயிற்சியளிப்பு 47

அத்தியாயம் 5 : சர்வதேச ஒத்துழைப்பு

5.1. அறிமுகம் 48
5.2. பிராந்திய மனித உரிமைகள் அமைப்புக்களுடன் தொடர்புகளை பலப்படுத்திக்கொள்ளல் 48
5.3. பிரித்தானிய உயர் ஸ்தானிகருடனான கலந்துரையாடல் 48
5.4. ஐரோப்பிய ஆணைக்குழுப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் 48
5.5. ஆணைக்குழுவின் தரப்படுத்தல் 49
5.6. இலங்கைக்கான நியூசிலாந்து உயர் ஸ்தானிகருடனான கலந்துரையாடல் 50
5.7. செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச குழுப் பிரிநிதியுடனான கலந்துரையாடல் 50

அத்தியாயம் 6 : மனித வளங்கள், நிருவாகம் மற்றும் நிதி

6.1. அறிமுகம் 51
6.2. மனித வளங்கள் முகாமைத்துவம் 51
6.3. நிதிசார் வளங்கள் முகாமைத்துவம் 52
6.4. உள்ளக / பயிலுனர் பயிற்சித் திட்டங்கள் 54

I. பின்னிணைப்பு

பின்னிணைப்பு 1 - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடு வரைபடம் 56
பின்னிணைப்பு 2 – பரிந்துரைகள் 57

தலைப்பெழுத்துச் சொல் பட்டியல்

A & F	நிர்வாகம் மற்றும் நிதி
APF	ஆசிய பசுபிக் ஒன்றியம்
CCD	கொழும்பு குற்றவியல் பிரிவு
CID	குற்றப் புலனாய்வுத் திணைக்களம்
CORE Justice	கூட்டு, திறந்த, பதிலளிப்பு மற்றும் பயன்மிக்க நியாயமான நிகழ்ச்சித் திட்டம்
CTF4HR	மனித உரிமைகளுக்கான பிரஜைகள் படையணி
DIG	பிரதிப் பொலீஸ் மாஅதிபர்
DMS	முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
DoP	சிறைச்சாலைகள் திணைக்களம்
ED & SP	கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்
EU	ஐரோப்பிய ஒன்றியம்
HQI	தலைமையகப் பரிசோதகர்
HRCSL	இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
I & I	புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள்
ICCPR	சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேசசாசனம்
IGP	பொலீஸ் மாஅதிபர்
IR	சர்வதேச தொடர்புகள்
JMO	சட்ட மருத்துவ அதிகாரி
LGBTIQ	ஓரினச் சேர்க்கையாளர்கள், திருநங்கைகள், இருபால் உடல், பாலினமாற்றத்திற்குட்படுபவர்கள்
MFA	ஆசிய புலம்பெயர் மாநாடு
NGOs	அரசசார்பற்ற அமைப்புக்கள்
NPM	தேசிய தடுப்புப் பொறிமுறைகள்
OHCHR	ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம்
OMP	காணாமற் போனோர் பற்றிய அலுவலகம்
OPCAT	சித்திரவதைக்கு எதிரான சர்வதேச சமவாயத்தின் விருப்பத்திற்குரிய பின்னேடு
R&M	ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை
SoR	ஆட்சேர்ப்பு நடைமுறை
TID	பயங்கரவாத தடுப்புப் பிரிவு
UN	ஐக்கிய நாடுகள் அமைப்பு
UNDP	ஐக்கிய நாடுகள் அமைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
UNHCR	ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர்

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை - 2021

2020 ஆம் ஆண்டைப் போன்றே, மீளாய்வாண்டிலும் கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக அநேகமான சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்ட காலப் பகுதியாகும். 2020 ஜனவரி மாதத்தில் முதலாவது தொற்றாளர் இனங்காணப்பட்டதன் பின்னர், இலங்கை தொற்று நோயின் இரண்டு அலைகளை திறமையாக முகாமைப்படுத்தியிருந்தாலும் 2021 ஏப்ரல் மாதத்தில் ஆரம்பமாகிய மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்துவதற்கு போராடிக் கொண்டிருந்தது.

நோய் பரவுவதனைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் கடும் நடவடிக்கைகளை எடுத்ததுடன், நாடு பூராவும் பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டதுடன், பயணக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. மூன்றாவது அலையுடன் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்பெறச் செய்தல், நாடு பூராவும் கொவிட் - 19 சிகிச்சை வசதிகளை பலப்படுத்தல் மற்றும் கொவிட் - 19 தடுப்பூசி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை முக்கியமாக உயர் ஆபத்துடனான பிரதேசங்கள் மற்றும் ஆபத்துக்குட்பட முடியுமான மக்களிடையே நடைமுறைப்படுத்தல் மீது கவனம் செலுத்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டு பூராவும் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்கு துரித தடுப்பூசித் திட்டம் குறிப்பிடத்தக்களவில் பயனுடையதாக இருந்ததென்ற விடயம் தெளிவானதாகும். சுகாதார அமைச்சின் புள்ளிவிபரங்களுக்கமைய 39.4 மில்லியன் தடுப்பூசிகளைப் பயன்படுத்தி 14.4 மில்லியன் நபர்களுக்கு பூரணமாக தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. (65.9%). இந்த நிலைமைகளின் கீழ் ஆண்டில் மனித உரிமைகள் சம்பந்தமாக சில துறைகளில் விருத்தியைக் காண்பித்துள்ளதுடன் ஏனைய துறைகளுக்கு முக்கியமாக கொவிட் - 19 தொற்று நோய் நிலைமையின் கீழ் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக பிரஜைகளுக்கு தமது உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனநாயக உரிமைகளை வரையறுப்பதனை தடுப்பதற்கான கூட்டு முயற்சியொன்றுக்கான தேவை ஏற்பட்டது. கொவிட் - 19 தொற்று நோய் நிலைமையின்போது பல தன்னிச்சையான கைதுகள் இடம்பெற்றதுடன், நாட்டின் சில பிரதேசங்களில் தடுத்து வைப்புக்களையும் அறியக் கிடைத்தது. முக்கியமாக ஆசிரியர் சங்கங்கள் சம்பள அதிகரிப்பைக் கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தபோது பொலீஸாரால் அவர்கள் தன்னிச்சைப்படி கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை தொற்று நோயை காரணங்காட்டி அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக தடை விதிக்கப்பட்டது. இந்த நிகழ்வுகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களின் கருத்து வெளியிடுவதற்கும், ஒன்றுகூடுவதற்குமான உரிமையை மறுக்கின்ற விடயமாக இருக்கின்றது. இந்தக் காலப் பகுதியில் தொடர்ந்தும் கைதில் இருக்கும் நபர்களின் மரணங்கள் மற்றும் மேலதிக கொலை நிகழ்வுகளும் ஏற்பட்டன. இவை பிரதானமாக போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் பாதாள உலக குழுக்களை இலக்காகக்கொள்ளப்பட்டவைகளாகும். அனுராதபுர சிறைச்சாலையில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இருக்கும் கைதிகள் துன்புறுத்தலுக்கு ஆளாகிய சில நிகழ்வுகளும் சிறைச்சாலையினுள் ஏற்பட்டன.

COVID 19 காரணமாக சில பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் மீறப்பட்டன. முக்கியமாக தொழில், கல்வி, சுகாதாரம், உணவு மற்றும் சமூக பாதுகாப்பு துறைகள் மீது தாக்கம் செலுத்தப்பட்டது. இந்த நிலைமை காரணமாக ஆபத்துக்குட்பட்டதுடன், விசேடமாக பிள்ளைகள், இயலாமையுடையோர், வயோதிபர்கள் மற்றும் தன்னினச் சேர்க்கை ஆண்கள்,

பெண்கள், இரு பாலினம், பாலின மாற்றத்திற்குட்படுபவர்கள் (LGBTIQ) மற்றும் தோட்டத் தொழிலாளிகள் ஆகியோர் பல்வேறு மாற்றங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது.

தரக் குறைவான பெற்றோலிய வாயு காரணமாக வாடிக்கையாளர்கள் பாதிப்புக்குட்பட்டதுடன், எரிவாயு அடுப்பு வெடிப்பு காரணமாக நாட்டில் சில பிரதேசங்களில் மரணங்கள் ஏற்பட்டன. கொவிட் - 19 கட்டுப்பாடுகள் காரணமாக உணவுகளின் விலை அதிகரித்ததுடன், பயன்மிக்க விலைக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையொன்று இருக்கவில்லை.

பசளை மற்றும் இரசாயனப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும்போது விவசாயிகள் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். இதன் காரணமாக அநேகமான விவசாயிகள் தமது பயிர்ச் செய்கை நடவடிக்கைகளைக் கைவிட்டு சீவனோபாயத்தை இழந்தனர். அரசாங்கம் சூழலைப் பாதுகாப்பதற்காக இரசாயனப் பசளை மற்றும் கிருமிநாசினிப் பாவனையைக் குறைக்கும் கொள்கையை அறிமுகப்படுத்தியது. மேலும், உள்நாட்டு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் சில உணவுப் பொருட்கள் இறக்குமதி மீது கட்டுப்பாடுகளை விதித்தாலும் மஞ்சள் போன்ற சில விவசாய உற்பத்திகளின் விலை பாரியளவினால் அதிகரித்தது.

2021 ஆம் ஆண்டு கொவிட் தொற்று நோய் காரணமாக சவால்மிக்க ஆண்டாக இருந்தது. எனவே சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியிலான உரிமைகள் மீது கடும் பாதிப்பு ஏற்பட்டது. மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், மதித்தல் மற்றும் நிறைவேற்றுவதற்கான அடிப்படைப் பொறுப்பு அரசாங்கத்திற்குரியதாகும்.

அத்தியாயம் 01

1.1 ஆணைக்குழு பற்றிய விபரம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆனது, நாட்டில் மனித உரிமைகளைப் விருத்தி செய்தல் மற்றும் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுவொன்றாகும். ஆணைக்குழுவானது இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகள் சம்பந்தமாகவும் கவனத்தைச் செலுத்துவதுடன் இந்த நாடும் குறித்த கடப்பாடுகளுடன் இயைந்து செயற்படுவதனை உறுதி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றது. 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுச் சட்டத்தினூடாக 1996 இல் ஆணைக் குழு தாபிக்கப்பட்டது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட ரீதியான அடிப்படை மற்றும் செயற்பாட்டுக் கோட்பாடுகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை அரசியலமைப்பிற்கான 19 ஆம் திருத்தத்தின் கீழான ஆணைக்குழுவொன்றாக இருந்தாலும், அது அரசியலமப்பினால் முறையாக தாபிக்கப்படவில்லை. ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் அரசியலமைப்பு சபையின் பரிந்துரையின் அடிப்படையில் ஜனாதிபதியவர்களால் நியமிக்கப்படுகின்றனர். ஆணைக்குழு பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

1.1.1. தூர நோக்கு

பன்முகத்தன்மையை அங்கீகரிக்கும் மற்றும் அனைவரதும் மனித உரிமைகளை மதித்து நடக்கும் ஒரு சமூகம்.

1.1.2. செயற்பணி

“இறைமையின் அடிப்படையிலமைந்த ஜனநாயகத்திற்குள் மனித உரிமைகள், மானிட மாண்புகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மேம்படுத்தல் மற்றும் அவற்றைப் பாதுகாப்பதில் தலைமையை வழங்குதல்”

1.1.3. அடிப்படைப் பெறுமதிகள்

- மானிட மாண்புகளை மதித்து நடத்தல்
- பன்முகத்தன்மையை மதித்து நடத்தல்
- சமத்துவம் மற்றும் பாகுபாடு காட்டாதிருத்தல்
- சமாதானம், உண்மை மற்றும் நீதி
- சுதந்திரம்
- பொறுப்புக்கூறல்
- சேவையாற்றுதல்
- பணிவு
- நேர்மை
- வெளிப்படைத்தன்மை

1.1.4. மூலோபாய ரீதியில் கவனம் ஈர்க்கப்பட வேண்டிய பகுதிகள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 2021 – 2024 இற்கான மூலோபாயத் திட்டம் வரையப்பட்டது. அதன் பிரதான இலக்குகளாவன:

இலக்கு 1 : இலங்கையின் அனைத்துப் பிரஜைகளினதும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் விருத்தி செய்தல்

இலக்கு 2 : மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அணுக முடியுமான மற்றும் பதில் அளிக்கக்கூடிய வலையமைப்பொன்றை அமைத்தல்.

இலக்கு 3 : மனித உரிமைகள் கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புதல்

இலக்கு 4 : முகாமைத்துவக் கட்டமைப்பின் வினைத்திறனை மேம்படுத்தல்

இலக்கு 5 : மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக ஏனைய நிறுவனங்களுடன் பங்காளித் தரப்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்

1.1.5. ஆணைக்குழுவின் இலச்சினை

தேசிய மட்டத்தில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவிப்பதற்கான பொறுப்பு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இலச்சினையூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. இலச்சினையின் நீல நிறமானது மனிதர்களின் உயிரோட்டம் மற்றும் படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றது. இரு கைககள் பாதுகாப்பை வெளிப்படுத்துவதுடன், உலகளாவிய மனித உரிமைகளின் மீதான நம்பகத்தன்மை மற்றும் சர்வதேச மட்டத்திலான பாதுகாப்பையும் வெளிப்படுத்துகின்றது. தேசிய மட்டத்திலான பாதுகாப்புக்கான நடவடிக்கை எடுப்பதற்கான தேவைப்பாட்டை இலங்கை வரைபடத்தினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. ஒரு பெண், ஒரு ஆண் மற்றும் ஒரு பிள்ளை என்பவற்றிலிருந்து மனித உரிமைகள் பாதுகாப்பு அனைவருக்கும் சமமென்பதை எடுத்தியம்புகின்றது.

1.2. ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரம்

மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தினூடாக அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகளுடன் தொடர்பாக ஆணைக்குழுவின் நீதிமன்றத் தத்துவத்தை சட்டம் ஏற்றுக்கொள்கின்றது. அடிப்படை உரிமைகள் என்றால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் III ஆவது அத்தியாயத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சில சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைப் போன்றே பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியிலான உரிமைகளுமாகும். "சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சாசனம் (ICCPR) மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் சம்பந்தமான சர்வதேச சாசனத்தினால் (ICESCR) பிரகடனப்படுத்தப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள்" என சட்டத்தில் மனித உரிமைகள் பொருள் கோடப்பட்டுள்ளதுடன், இதற்கமைய தேசிய ரீதியிலான தரங்கள் இலங்கையின் சர்வதேச சட்டக் கடப்பாடுகளுடன் இயைந்துள்ளனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது.

ஆணைக்குழுவின் சட்ட ரீதியான அலுவல்கள் (சட்டத்தின் 10 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) :

- அடிப்படை உரிமைகள் சம்பந்தமாக அரசியலமைப்புச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய செயற்படுவதனை உறுதிப்படுத்தல் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் அவற்றைப் பின்பற்றுதல் மற்றும் மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைகள் தொடர்பான முறைப்பாடுகளை புலனாய்வு செய்தல் மற்றும் விசாரணைகளை நடாத்துதல்

- அடிப்படை உரிமைகள் மீறல் அல்லது மீறப்படவுள்ள உரிமைகள் சம்பந்தமான முறைப்பாடுகளை விசாரித்தல் மற்றும் புலனாய்வு செய்தல் மற்றும் தலையீடு செய்து அல்லது இணக்கப்படுத்தல் ஊடாக தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல்

- அடிப்படை உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக சட்டரீதியிலான மற்றும் நிர்வாகம் சார்ந்த கட்டளைகள் மற்றும் நடைமுறைகளை தயாரிப்பதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் உதவுதல்

- தேசிய சட்டங்கள் மற்றும் நிர்வாக நடைமுறைகள், சர்வதேச மனித உரிமைகள் இணக்கப்பாடுகள் மற்றும் தரங்களுடன் இயைந்திருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளை முன்வைத்தல்.

- மனித உரிமைகள் துறையின் உடன்படிக்கைகள் மற்றும் வேறு சர்வதேச ஒப்பந்தப் பத்திரங்களுக்கு பங்களிப்புச் செலுத்தல் மற்றும் இணக்கப்பாட்டை தெரிவிப்பதன் தேவைப்பாடு சம்பந்தமாக அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை முன்வைத்தல் மற்றும்
- மனித உரிமைகள் சம்பந்தமாக அறிவுறுத்துவதனை ஊக்குவித்தல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான கல்வியை மேம்படுத்தல்

சட்ட ரீதியான அலுவல்களை நிறைவேற்றுவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் (சட்டத்தின் 11 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)

- அடிப்படை உரிமைகள் மீறல்கள் அல்லது அதனுடன் தொடர்புடைய மீறல்கள் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்ளல்.

- ஆணைக்குழுவினால் அதற்குரிய அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையென ஆணைக்குழு கருதும் மாகாண மட்டத்திலான சில உப குழுக்களை நியமித்தல்.

- அடிப்படை உரிமைகள் மீறலொன்று அல்லது தொடர்புடைய மீறலொன்று தொடர்பான நீதிமன்றமொன்றில் விசாரிக்கப்பட்டுவரும் வழக்குடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு அந்த நீதிமன்றத்தின் அனுமதியுடன் தலையீட்டை மேற்கொள்ளல்.

- நீதிமன்ற ஆணையொன்றின் ஊடாக அல்லது வேறு விதத்தில் தடுத்துவைத்திருக்கும் நபர்களின் நலனோம்புகை தொடர்பாக கண்காணித்தல், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களை நிதமும் பரிசீலித்தல் மற்றும் அவர்களுடைய நிலைமைகளை மேம்படுத்துவதற்கு தேவையான பரிந்துரைகளை முன்வைத்தல்.

- உயர் நீதிமன்றத்தினால் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏதேனுமொரு விடயம் சம்பந்தமாகவும் ஆணைக்குவினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென உயர் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படும் கட்டளை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்.

- நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதனூடாக மனித உரிமைகள் சம்பந்தமான ஆராய்ச்சிகளில் ஈடுபடல், மற்றும் மனித உரிமைகள் பற்றிய அறிவை விருத்திசெய்தல் மற்றும் அவ்வாறான ஆராய்ச்சிப் பெறுபேறுகளை சமூகத்தில் பிரசித்தப்படுத்தல் மற்றும் பகிர்ந்துகொள்ளல்

- ஆணைக்குழுவுக்கு முறைப்பாட்டை மேற்கொள்ளும் அதிருப்திக்கு ஆளாகிய ஒருவருக்கு அல்லது அதிருப்திக்கு ஆளாகியுள்ள ஒருவர் சார்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்வரும் ஒருவருக்கு அவரால் நியாயமான வகையில் மேற்கொள்ளப்பட்ட செலவை ஈடு செய்யுமுகமாக தேவையான தொகையொன்றை செலவு செய்வதற்கு ஆணைக்குழுவுக்குரித்தான தற்புணிபு அதிகாரம்.

- ஆணைக்குழு தனது அலுவல்களை மேற்கொள்வதற்குத் தேவையான அல்லது பொருத்தமான அல்லது அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளல்.

1.3. நிறுவனக் கட்டமைப்பு


நிறுவனத்தின் உச்சத்தில் தவிசாளர் மற்றும் ஆணையாளர்களை உள்ளடக்கிய ஆணைக்குழுவின் சபை காணப்படுகின்றது. ஆணைக்குழுவின் சட்ட ரீதியான அதிகாரத்தை அமுல்படுத்துவதற்காக அது கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுக்கும். சபைக் கூட்டம் மாதாந்தம் நடைபெறும். 2015 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பதவிக் காலம் 2020 ஆம் ஆண்டில் முடிவடைந்தது. அதன் காரணமாக அதிமேதகு ஜனாதிபதியவர்கள் ஆணைக்குழுவுக்கு புதிய தவிசாளர் மற்றும் ஆணையாளர்களை நியமித்தார்.

தற்போது ஆணைக்குழு 148 பேர்களைக் கொண்ட ஆளணியைக் கொண்டுள்ளது. அது 04 பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. அந்தப் பிவுகளாவன: விசாரணை மற்றும் புலனாய்வு (I&I), கல்வி மற்றும் விசேட திட்டங்கள் (நுனுரூளீ), ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை (R&M) , நிர்வாகம் மற்றும் நிதி (A&F) ஆகிய பிரிவுகளாகும். தேவையான ஆளணி அங்கத்தவர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு ஆணைக்குழுவினால் இயலுமாகியவுடன் சர்வதேச தொடர்புகள் பிரிவொன்றையும் (IR) தாபித்துக்கொள்ள முடியும். அனைத்துப் பிரிவுகளுக்கும் பணிப்பாளரொருவர் தலைமை வகிப்பதுடன் தவிசாளர் மற்றும்/அல்லது ஆணையாளரொருவர்/ ஆணையாளர்களால் கண்காணிக்கப்படுகின்றது.

இது தவிர, ஆணைக்குழு 10 பிராந்திய அலுவலகங்கள் (அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கல்முனை, கண்டி, மாத்தறை, திருகோணமலை, மற்றும் வவுனியா) மற்றும் 03 உப அலுவலகங்கள் (கிளிநொச்சி, மன்னார், புத்தளம்) ஊடாக தனது சேவைகளை வழங்குகின்றது. (பின்னணைப்பு 1 இனைப் பார்க்கவும்.) அனைத்து பிராந்திய அலுவலகங்களுக்கும் பிராந்திய ஒருங்கிணைப்பாளரொருவர் தலைமை வகிப்பதுடன், தவிசாளர் மற்றும அல்லது ஆணையாளரொருவர ஆணையாளர்களின் மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆணைக்குழுவின் அலுவல்களை மக்களிடம் கொண்டு செல்வதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதேச மட்டத்தில் செயற்படுகின்றது. மக்களில் அநேகமானோர் பிராந்திய

மற்றும் உப அலுவலகங்களினூடாக ஆணைக்குழுவை நாடுகின்றனர். மனித உரிமைகள் பாதுகாப்பை விருத்தி செய்வதற்கு மற்றும் ஆணைக்குழுவின் அலுவல்களுடன் மக்களை நெருங்கிய வகையில் நடவடிக்கை மேற்கொள்ளச் செய்வதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொள்கின்றது. எனவே ஆணைக்குழுவின் பணிப்புக்களை பயன்மிக்க வகையில் நிறைவேற்றும்போது தலைமை அலுவலகம் மற்றும் மாகாணங்களில் வாழும் மக்களிடையே சாதாரண இணைப்பையும் தாண்டி பிராந்திய மற்றும் உப அலுவலகங்களினால் முக்கியமான அலுவல்கள் நிறைவேற்றப்படுகின்றன. முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் மனித உரிமைகள் மீறப்படல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரித்தல், மனித உரிமைகள் மீறப்படல் தொடர்பாக கலந்துரையாடுதல், பிணக்குகளைத் தீர்ப்பதற்கான தலையீட்டை மேற்கொள்ளல், மனித உரிமை மீறல்கள் தொடர்பான பரிந்துரைகளை தலைமை அலுவலகத்திற்கு ஆற்றுப்படுத்தல், மேற்பார்வை அலுவல்களை மேற்கொள்ளல், மாகாண மட்டத்தில் வழிப்புணர்வூட்டல், சிவில் அமைப்புக்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளல் ம்றறும் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல் என்ற ரீதியில் இந்த அலுவலகங்கள் விரிவான வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிறுவனக் கட்டமைப்பு



அத்தியாயம் 02

புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள்

2.1. அறிமுகம்

புலனாய்வுகள் மற்றும் விசாரணைகள் நடவடிக்கைகள் இந்தப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இப்பிரிவின் முக்கிய பொறுப்பு என்னவெனில், 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக் குழுச் சட்டத்திற்கமைய அடிப்படை உரிமைகள் மீறப்படல் அல்லது மீறப்படவிருக்கும் அடிப்படை உரிமைகள் சம்பந்தமான முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதாகும். அதற்கமைய, இந்தப் பிரிவின் அலுவல்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் பிரிவுகளின் அடிப்படையில் அமைந்திருக்கின்றது.

10 (அ). அடிப்படை உரிமைகளுடன் தொடர்பாக அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்வதனை உறுதிப்படுத்தல் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் அவற்றைப் பின்பற்றவதனை விருத்தி செய்யும் நோக்கில் நடைமுறைகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்

10 (ஆ) மீறப்படல் அல்லது மீறப்படவிருக்கும் அடிப்படை உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் சம்பந்தமான முறைப்பாடுகளை விசாரணை செய்தல் மற்றும் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கமைய இணக்கப்பாடு மற்றும் தலையீட்டின் மூலம் அவற்றைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

ஆணைக்குழுவுக்கு பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதுடன் அதனைப் போன்றே அடிப்படை உரிமைகள் மீறப்படுதல் தொடர்பாக தெரியக்கிடைக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக சொந்தப் பிரேரணையின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு சாசனத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2.1.1 சேவை முறைகளைப் பலப்படுத்தல்

புதிய சேவை முறைகளை அறிமுகஞ் செய்தல் மற்றும் அமுல்படுத்தல் மற்றும் நிலவும் பொறிமுறைகளை மேம்படுத்தல் ஊடாக அடிப்படை உரிமைகள் மீறப்படுதலுக்கு ஆளாகும் பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் குறைகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளும் புலனாய்வு மற்றும் விசாரணைகள் பிரிவின் வினைத்திறன் மற்றும் பதில் அளிப்பை ஆணைக்குழுவினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2.1.2. மனித உரிமைகள் தகவல் முறைமையை (HURIN) ஆரம்பித்தல்

முறைப்பாடுகள் பொறிமுறையை முறைப்படுத்துவதற்கு மற்றும் இலத்திரனியல் முறைகளைப் பயன்படுத்தி முறைப்பாடுகளை முன்வைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு மனித உரிமைகள் தகவல் முறைமை (HURIN) ஆரம்பிக்கப்பட்டது.

2.1.3 மேன்முறையீட்டுப் பொறிமுறையை அறிமுகஞ் செய்தல்

பரிந்துரைகள் வழங்கப்பட்டு நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் தவிர ஏனைய அனைத்து முறைப்பாடுகளுக்கும் 2018 இல் அறிமுகஞ் செய்யப்பட்ட மேன்முறையீட்டுப் பொறிமுறை 2021 இல் சிறப்பான வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. கொவிட் - 19 தொற்று நோயின் விளைவாக சவால்மிக்க சேவை நிபந்தனைகள் இருக்கையிலும், முறைப்பாடுகள் தொடர்பாக மீளக் கவனத்திற்கொள்வதற்கான காரணங்கள் இருக்கின்றனவா? எனத் தீர்மானிப்பதற்கு 2021 இல் கணிசமானளவு மேன்முறையீடுகள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டது.

2.1.4 2021 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளை கையாளும் தன்மை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு 2021 ஆம் ஆண்டில் 6322 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. 6322 முறைப்பாடுகளில் 3228 முறைப்பாடுகள் (51%) பிராந்திய அலுவலகங்களுக்குக் கிடைத்துள்ளதுடன் மீதி முறைப்பாடுகள் தலைமை அலுவலகத்திற்கு கிடைத்துள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த முறைப்பாடுகளில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்களில்லை. கொவிட் - 19 தொற்று நோய் நிலைமை 2021 ஆம் ஆண்டு பூராவும் நிலவியதுடன், முன்னைய ஆண்டுகளைப் போன்றே அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகளான 26% கைதின்போது சித்திரவதை செய்தல், தன்னிச்சைக் கைதுகள், தடுத்து வைப்புக்கள், துன்புறுத்தல் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை மீறுதல் என்பவற்றுடன் தொடர்புடையவையே கிடைத்துள்ளன. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் தனிப்பட்ட சுதந்திரம் மீறப்0படுதல் சம்பந்தமான முறைப்பாடுகள் குறைவடைந்துள்ளன. அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடின்மை சம்பந்தமான மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1080 ஆக இருந்ததுடன், அதில் 592 பொலீஸுக்கு எதிரான முறைப்பாடுகளாகும். தொழில்களுடன் தொடர்பான முறைப்பாடுகள் 811 ஆகுமென்பதோடு, அது மொத்த முறைப்பாடுகளின் 13% ஆகும். தலைமை அலுவலகத்திற்கு மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான புள்ளிவிபரங்கள் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.1.5 2021 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய விபரம்

இந்த ஆண்டில் 4319 முறைப்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், முறைப்பாட்டாளர்கள் ஆர்வம் காண்பிக்காமையின் காரணமாக இந்த வழக்குகளில் 37% (1588) நிறைவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 369 இற்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய விபரம் அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகத்தால் பெறப்பட்ட முறைப்பாடுகளின விவரங்கள் - 2021


முறைப்பாடுகளின் வகை	பிராந்தியம்												பிராந்திய அலுவலகம்	தலைமை அலுவலகம்	மொத்தம்
	அம்பாறை	அனுராதபுரம்	பதுளை	மட்டக்களப்பு	யாழ்ப்பாணம், கிளிநொச்சி	கல்முனை	கண்டி	மாத்தறை	திருகோணமலை	வவுனியா	மன்னார்	புத்தளம்			
தனிப்பட்ட சுதந்திரம்	17	112	21	51	109	51	93	155	39	56	25	84	813	803	1616
1) சித்திரவதை (உடல் மற்றும் உள ரீதியிலான)	3	36	1	5	26	4	18	13	4	7	5	12	134	168	302
2) கீழ்த்தரமாக கவனித்தல்	-	-	-	-	6	-	-	2	1	-	-	3	12		12
3) துன்புறுத்தல்கள்	2	4	13	9	30	25	23		9	34	11	32	192	199	391
4) பாலியல் துன்புறுத்தல்கள்	-	-	-	-	-	-	-	1	-	-	-	-	1	7	8
5) அச்சுறுத்தல்கள்	-	7	-	10	23	3	-	34	2	1	-	18	98	-	98
6) தன்னிச்சையான கைது / தடுத்துவைத்தல்	12	65	7	27	24	19	51	99	23	14	9	19	369	403	772
7) கைதியாக இருக்கையில் மரணித்தல்	-	-	-	-	-	-	-	2	-	-	-	-	2	11	13
8) நீதிக்குப் புறம்பான கொலைகள்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
9) பலாத்காரமாக அல்லது விருப்மின்றி மேற்கொள்ளப்பட்ட காணாமற்போகச் செய்யப்பட்டமை	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
10) கைதிகளின் உரிமைகள்	-	-	-	-	-	-	1	4	-	-	-	-	5	15	2
11) ஏனைய சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்	-	-	-	4	2	2	2	2	-	-	-	-	12	3	15
12) தொழில் சார்ந்த	17	48	38	24	30	34	120	51	8	17	3	34	424	387	811
13) கல்வி சார்ந்த	-	3	7	25	9	13	52	60	-	1	1	11	182	135	317
14) அரச நலனோம்புகை சேவைகள்	-	-	-	3	16	8	15	4	4	1	3	4	58	-	58
15) உட்கட்டமைப்பு மற்றும் பயன்பாடுகள்	1	-	4	-	3	7	11	1	-	2	-	3	32	8	40
16) வாக்காளர் பதிவு தொடர்பான முறைப்பாடுகள்	-	-	-	1	-	1	-	-	-	-	-	2	4	3	7
17) அரச நிறுவனங்களின் வினைத்திறனின்மை தொடர்பான முறைப்பாடுகள்	27	208	73	247	98	55	143	35	23	53	14	4	976	100	1076
(அ) பொலீஸ்	5	60	39	165	72	44	68	25	14	32	10	-	534	58	592
(ஆ) ஏனைய அரசாங்க நிறுவனங்கள்	22	148	34	82	26	11	75	10	9	21	4	-	442	42	484
சிறுவர் உரிமைகள்	-	3	-	2	-	3	2	-	-	-	-	-	10	-	10
இயலாமையுடையோரின் (மாற்றுத் திறனாளிகள்) உரிமைகள்	-	-	-	-	-	-	1	-	-	-	-	-	1	2	3
மொழி சார்ந்த உரிமைகள்	-	-	-	-	-	-	1	-	-	-	-	1	2	-	2
புலம் பெயர்ந்துள்ள ஊழியர்களின் உரிமைகள்		2		6			1		1			1	11	3	14

பாலினமாற்றத்திற்குட்பட்டுள்ள (ஓரினச் சேர்க்கையாளர்கள், திருநங்கைகள்) நபர்களின் உரிமைகள் (டுபுடீவு)	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	4	4
சுகாதாரம் சார்ந்த உரிமைகள்	-	2	1	6	2	-	1	-	-	-	-	-	12	4	16
காணிகள் மற்றும் சொத்துரிமைகள்	20	22	15	19	16	19	32	11	10	26	16	45	251	66	317
உள்ளக புலம்பெயர் நபர்கள் / திரும்பி வந்த அகதிகள்	-	-	-	-	-	-	1	-	-	-	-	-	1	-	1
சூழல் சார்ந்த உரிமைகள்	-	1	-	2	3	1	-	3	-	1	-	4	15	9	24
நிர்வாகம் சார்ந்த விடயங்கள்	3	-	10	-	7	8	34	16	7	1	-	17	103	71	174
பெண்கள் உரிமைகள்	-	-	-	-	-	-	-	1	-	1	-	-	2	-	2
ஏனையவை (உரிமைக் கட்டளைக்குள் உள்ளடக்கப்படாத முறைப்பாடுகள், ஏனைய நிறுவனங்குரியவை)	50	75	22	10	16	5	23	95	3	9	7	-	315	1496	1811
மொத்தம்	135	476	191	400	311	207	532	434	95	168	69	210	3228	3094	6318

தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகள் - 2021

	அம்பாறை	அனுராதபுரம்	பதுளை		மட்டக்களப்பு	யாழ்ப்பாணம்	கண்டி	கல்முனை	மாத்தறை	திருகோணமலை	மன்னார்	வவுனியா	புத்தளம்	மொத்தம்	சதவீதம்
இணக்கம் ஏற்படுத்தப்படல்	07	128	21		40	80	12	10	01	13	13	15	09	369	8.54
அடிப்படை உரிமை மீறல்கள் ஏற்படாமை	18	76	46		19	106	193	22	64	14	13	40	04	887	20.54
வாபஸ் பெறப்பட்டமை	--	10	15		01	01	08	01	02	02	03	03	05	118	2.73
ஆர்வம் காட்டாமை	25	88	32		57	17	93	09	82	20	03	34	20	1588	36.77
விடயப் பரப்புக்குள் உள்ளடக்கப்படாமை	50	75	22		10	18	29	--	97	19	12	13	--	489	11.32
நிவாரணம் வழங்கப்பட்டமை	10	--	19		74	10	52	31	20	--	06	17	04	340	7.87
நிறைவடையாத நீதிமன்ற செயற்பாடுகள	11	62	--		14	47	39	08	16	--	02	--	02	304	7.04
வழிகாட்டல்கள் வழங்கப்படல்	--	--	--		--	--	37	--	--	--	--	--	--	44	1.02
காலம் விதிக்கப்படல்	--	--	--		--	01	06	--	35	--	--	--	--	44	1.02
தலைமை அலுவலகத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட	--	07	06		02	--	13	--	--	01	--	--	--	29	0.67
ஏனைய நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தல்	--	02	51		01	03	22	--	10	--	02	06	--	107	2.48
மொத்தம்	**121**	**448**	**212**		**218**	**283**	**504**	**81**	**327**	**69**	**54**	**128**	**44**	**4319**	**100.00**

அட்டவணை 2 – 2021 இல் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய விபரம்:




2.2. பரிந்துரைகள்

2021 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் 3 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 88 பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

முறைப்பாட்டு வகை	முறைப்பாடுகளின் எண்ணிக்கை	சதவீதம்
தனிநபர் சுதந்திரம்	44	50%
தொழில் நடவடிக்கைகள்	23	27%
கல்வி (பாடசாலை அனுமதி)	12	14%
காணி மற்றும் சொத்துரிமை	02	2%
அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்	02	2%
அரச நலனோம்புகை சேவைகள்	03	3%
ஏனையவை	02	2%
மொத்தம்	**88**	**100%**

அட்டவணை 3 : முறைப்பாடுகளுக்கமைய வழங்கப்பட்ட பரிந்துரைகள் - 2021



2.3 விசேட விசாரணைகள் மற்றும் தலையீடுகள்

2.3.1 அனுராதபுரம் சிறைச்சாலையில் ஏற்பட்ட நிகழ்வுகள் தொடர்பான விசாரணை

2021.09.12 ஆம் திகதி சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட சிலர் அனுராதபுரம் மறியற் சிறைச்சாலை வளவிற்குள் குறித்த நோக்கங்கள் எதுவுமின்றி உத்தியோகபூர்வமற்ற முறையில் நுழைந்த நிகழ்வொன்று அறிக்கைப்படுத்தப்பட்டது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டுள்ள சில சிறைக் கைதிகளை மேலே குறிப்பிடப்பட்ட அமைச்சர் அழைத்து அவர் முன்னிலையில் முழங்காலிட்டு இருக்குமாறு கூறி மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளார். அந்த நிகழ்வின் பின்னர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசேட குழுவொன்று அனுராதபுரம் சிறைச்சாலைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டதுடன், அங்கு கைதிகளின் வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. மேலும், மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட குறித்த அதிகாரிகளிடம் காரண விளக்கம் கோருவதற்காக அழைக்கப்பட்டனர்.

2.3.2 கைதின்போது ஏற்படும் மரணம்

2021 நவம்பர் 25 ஆம் திகதி இரவு 10.00 மணியளவில் சட்டத்தரணி சஞ்சய ஆரியதாச அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு துரித அழைப்பொன்றை ஏற்படுத்தி ஹேவா லுணுவிலகே லசந்த அல்லது டின்கரின் லசந்தவை களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினால் கைது செய்து ஒழித்து வைத்திருக்கும் ஆயுதங்களை கண்டறியும் போர்வையில் அன்றைய தினம் அந்த நபரை கொலை செய்வதற்குத் திட்டமிட்டிருப்பதாக அறிவித்திருந்தார். மேலே குறிப்பிடப்பட்ட முறைப்பாட்டின் பின்னர் அந்த முறைப்பாடு சம்பந்தமாக ஏற்புடைய சட்ட ரீதியான

பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் இலங்கை பொலீஸ் திணைக்களத்தின் மனித உரிமைகள் பிரிவின் பணிப்பாளருக்கு அறிவுரை வழங்கினார். மேலும், 2021 நவம்பர் மாதம் 25 ஆம் திகதி துரித அழைப்பு இலக்கத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் பொலீஸ் குற்றப் பிரிவிடம் அவ்வாறான கைது சம்பந்தமாக வினவியுள்ளார். எவ்வாறாயினும், அவ்வாறான கைது மேற்கொள்ளப்படவில்லையென நிலையப் பொறுப்பதிகாரியினால் அந்த உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் லுணுவிலகே லசந்த அல்லது டின்கரின் லசந்தவை ஒழித்து வைத்துள்ள ஆயுதங்களை கண்டுபிடிப்பதற்காக அழைத்துச் செல்லும்போது ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டின்போது மரணித்த செய்தி ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் ஆணைக்குழுவினால் விசாரணைக்குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், அவர்கள் குறித்த மரணம் ஏற்பட்ட இடத்திற்குச் சென்று இந்த நிகழ்வுடன் தொடர்புடைய தரப்புக்களிடம் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டனர். லுணுவிலகே லசந்த அல்லது டின்கரின் லசந்த என்பவரின் கைதின் போதான மரணம் சம்பந்தமான விசாரணை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2.3.3 வீட்டுப் பாவனை எல் பீ எரிவாயு அடுப்பு, சிலிண்டர் வெடித்தல் பற்றிய விசாரணை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் எல் பீ எரிவாயு அடுப்பு, சிலிண்டர் வெடித்தல் சம்பந்தமாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்புக்களுடன் எல் பீ எரிவாயு நுகர்வோருக்கு ஏற்பட முடியுமான எந்தவொரு பாதிப்பிலிருந்தும் அவர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக துரிதத் தீர்வொன்றைக் கண்டறிவதற்காக விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆணைக்குழுவினால் எரிவாயு கம்பனிகள் மற்றும் தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள் அழைக்கப்பட்டிருந்தன.

2.4 ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதிப் படையில் ஈடுபடுத்துவதற்காக இலங்கை பாதுகாப்புப் படை அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல்

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதிப் படை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இராணுவ உத்தியோகத்தர்களின் மனித உரிமைகள் தொடர்பான விசாரணைகள் 2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. இந்த செயற்பாட்டினூடாக அமைதிப் படையில் ஈடுபடுத்தப்பட வேண்டிய நபர்கள் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் அர்ப்பணிப்பு உள்ளிட்ட உயர் தரங்களை பூர்த்தி செய்திருத்தலை உறுதிப்படுத்துகின்றது. விசாரணை செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் நடைமுறை விதிகளில் குறைபாடு இருந்தமையினால் விசாரணை செயற்பாட்டை முறைப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு நடைமுறையை (SOP) தயாரிப்பதற்கு 2018 இல் வட்ட மேசை கலந்துரையாடலொன்றின்போது தீர்மானிக்கப்பட்டது. அனைத்துத் தரப்புக்களும் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு

நடைமுறைக்கு இணக்கம் தெரிவிக்கும் வரை விசாரணை நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. இறுதியில் அது 2018 திசெம்பர் மாதம் நடைமுறைப்படுத்தப்பட்டது. விண்ணப்பங்கள் குவிக்கப்படுவதனைத் தவிர்ப்பதற்காக இரட்டை முறை விசாரணையை மேற்கொள்வதற்கு அனைத்துத் தரப்பினராலும் தீர்மானிக்கப்பட்டது. அதாவது விசாரணை செயற்பாட்டை துரிதப்படுத்துவதற்காக ஆணைக்குழுவைப் போன்றே ஜினீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பற்றிய ஆணையாளர் நாயகம் அலுவலகத்தினாலும் விண்ணப்பங்கள் பரீட்சிக்கப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் ஈடுபடுத்துவதற்காக 296 இராணுவ வீரர்களை சோதனையிடப்பட்டுப் சான்றுப்படுத்தல்பட்டது. விபரம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நிறைவு செய்யப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள்

நடவடிக்கையின் பெயர்	நிறுவனம்	விடுவிக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை
UNIFIL Contingent	இலங்கை இராணுவப் படை	66
UNMISS L II Hospital Contingent	இலங்கை இராணுவப் படை	78
MINUSMA Contingent	இலங்கை இராணுவப் படை	34
MINUSCA Aviation Contingent	இலங்கை விமானப் படை	110
MINUSCA Individual Officers	இலங்கை விமானப் படை	05
MINUSCA Individual Officers	இலங்கை விமானப் படை	02
UNIFIL Individual Officers	இலங்கை கடற் படை	01
விடுவிக்கப்பட்ட மொத்தக் கோப்புக்களின் எண்ணிக்கை	-	**296**

2.5. சொந்தப் பிரேரணை விசாரணை

சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழு சொந்தப் பிரேரணை விசாரணைகளை (suo motu) மேற்கொண்டு சில பிரச்சினைகள் மீது தலையீட்டை மேற்கொண்டது. அநேகமாக தலையீட்டை மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் ஊடகங்களைக் கண்காணித்தல் மற்றும் நபர்கள் அல்லது அமைப்புக்கள் அவ்வாறான சிக்கல்களை ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வருவதனூடாக இனங்கண்டுகொள்ளப்படுகின்றது. இந்த செயற்பாட்டினூடாக

விசாரணைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை பிரிவு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்களுக்கிடையில் நெருங்கிய ஒத்துழைப்பு காண்பிக்கப்படுகின்றது.

2.5.1. நிகழ்வு இல.: HRC/SUO/MOTU/01/21

இந்த முறைப்பாடானது அரசியலமைப்பின் 11 ஆம் உறுப்புரை மீறப்பட்டமை சம்பந்தமானதாகும். இலங்கை சட்டக் கல்லூரியின் சட்ட மாணவனான முறைப்பாட்டாளர் திரு. சதேந்திர மிகார குணவர்தன 2021 பெப்ரவரி 25 ஆம் திகதி பேலியகொட பொலீஸ் நிலையத்தில் இருக்கும்போது சித்திரவதை, குரூரம் மற்றும் மனிதாபிமானமற்ற தண்டனைகளுக்கு ஆளாகியுள்ளார். பொலீஸ் கைதில் இருந்த இரண்டு நண்பர்களைப் பார்வையிடச் சென்று கொண்டிருக்கையில் அவர் சித்திரவதைக்கு ஆளாகியுள்ளார். இந்த விடயம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2.5.2 நிகழ்வு இல.: HRC/SUO/MOTU/04/21

நாராஹேன்பிட்ட பொலீஸ் நிலையத்தின் பொலீஸ் உத்தியோகத்தர்கள் தன்னைக் கைது செய்து சித்திரவதைக்குட்படுத்தியதாக இந்த முறைப்பாட்டின்போது களவுடன் தொடர்புடைய சந்தேகநபர் குற்றஞ் சுமத்துகின்றார். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் குழுவொன்று அந்தப் பொலீஸ் நிலையத்திற்கு வருகைதந்து அவர்களுடைய அவதானிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.ஆணைக்குழுவினால் மேலதிக விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.5.3. நிகழ்வு இல.: HRC/SUO/MOTU/06/21

இங்கு, மரணித்த திரு. எஸ். எச். எம். கான் என்பவரை பாணதுறை – வடக்கு பொலீஸ் நிலையத்தின் உத்தியோகத்தர்களால் 2021 யூன் மாதம் 06 ஆம் திகதி உணவைக் கொள்வனவு செய்வதற்காக தனது வீட்டிலிருந்து வெளியே சென்றிருக்கையில் கைது செய்யப்பட்டார். வெகுசன ஊடகங்களில் வெளியிடப்பட்ட சீசீரீவீ காட்சிகளின் அடிப்படையில் மரணித்த நபர் பொலீஸ் வாகனத்திலிருந்து வெளியே தள்ளப்படுவதனால் வாகனத்திலிருந்து வீசப்படுவதனை காண முடியுமாக இருந்தது. அவரது மனைவியின் வாக்குமூலத்திற்கமைய கணவனைப் பார்வையிடச் சென்ற சந்தர்ப்பத்தில் கணவர் பாரிய காயங்களுக்கு ஆளாகியிருப்பதனைக் கண்டிருக்கின்றார். பின்னர் பாணதுறை வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மரணித்துள்ளார். முறைப்பாட்டிற்கமைய மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

2.5.4 நிகழ்வு இல.: HRC/SUO/MOTU/08/21

ஜனாதிபதி மன்னிப்புக் கோரி வெலிகடை சிறைச்சாலையின் கைதிகள் ஆரம்பித்த எதிர்ப்புப் போராட்டம் சம்பந்தமாக ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்று கிடைத்திருந்தது. ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் சிறைச்சாலைக்குச் சென்று ஜனாதிபதி மன்னிப்பு சம்பந்தமான சட்ட ரீதியான பின்னணி மற்றும்

ஆணைக்குழுவின் பொறுப்பு என்பவற்றைத் தெளிவுபடுத்தினர். இந்தத் தெளிவுபடுத்தலின் பின்னர் எதிர்ப்பாளர்களின் சிலர் போராட்டத்தைக் கைவிடுவதற்கு இணங்கியதுடன் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் பிரச்சினையை சமரசப்படுத்துமாறு அறிவுரை வழங்கினர்.

2.5.5 நிகழ்வு இல.: HRC/SUO/MOTU/09/21

இங்கு இலங்கை பொலீஸ் படையின் பொலீஸ் உத்தியோகத்தர்கள் பொது மக்களைத் துன்புறுத்தும் சில நிகழ்வுகள் ஆணைக்குழுவின் கவனத்தை ஈர்க்கச் செய்தது. இரத்தினபுரி சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் நடந்துகொண்ட விதம் மற்றும் ஏறாவூர் பொலீஸ் நிலையத்திற்கு இணைக்கப்பட்டு பணியாற்றும் பொலீஸ் உத்தியோகத்தர்களின் நடத்தை சம்பந்தமாக ஏற்பட்ட நிகழ்வுகள் தொடர்பாக ஆணைக்குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டது. இந்த விடயங்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், இலங்கை உயர் நீதிமன்றத்திற்கும் விண்ணப்பமொன்று தாக்கல் செய்யப்படும்.

2.5.6 நிகழ்வு இல.: HRC/MTR/Suomotu/07/21/V

2021.11.16 ஆம் திகதி பனாமுர பொலீஸினால் கைது செய்யப்பட்ட இந்திக்க ஜயரத்ன என்பவர் பொலீஸ் கைதில் இருக்கும்போது தூக்கிலிட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், பிரதேசவாசியொருவரைத் தாக்கி கொலை செய்தமை சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் விசாரணை நடைபெறுகின்றது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் குழுவொன்று பனாமுர பொலீஸ் நிலையத்திற்கு வருகைதந்து கைது சம்பந்தமாக நீதிமன்றத்திற்கு அறிக்கைப்படுத்தி அனைத்துத் தகவல்கள் சம்பந்தமாகவும் பதிவேடுகளைப் பரிசீலித்து குறிப்புக்கள் இடப்பட்டுள்ளன. கைது செய்தல் முதல் நீதிமன்றத்திற்கு அறிக்கைப்படுத்தல் வரையான அனைத்து அறிக்கைகளையும் பெற்றுக்கொள்வதற்காக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையொன்றும் கோரப்பட்டுள்ளது. தற்போது குறித்த உத்தியோகத்தர்களின் வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

2.5.7. நிகழ்வு இல.: HRC/MTR/Suomotu08/21/G

2021.12.18 ஆம் திகதி ஹுங்கம பொலீஸினால் கைது செய்யப்பட்ட பிரேமதிலக்க அமரவீர என்பவர் பொலீஸ் கைதில் இருக்கும்போது இறந்துள்ளார். இந்த மரணத்திற்குக் காரணம் மாரடைப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2021.12.18 ஆம் திகதி சட்ட விரோத மதுபான விற்பனை சம்பந்தமாக கைது செய்யப்பட்டிருந்த இந்த சந்தேக நபரின் மரணம் சம்பந்தமான விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் குழுவொன்று ஹுங்கம பொலீஸுக்கு வருகைதந்து கைது சம்பந்தமாக நீதிமன்றத்திற்கு அறிக்கைப்படுத்தி அனைத்துத் தகவல்கள் மற்றும் சீசீரீவீ காட்சிகளைப் சோதனையிட்டு குறிப்புக்கள் பெற்றக்கொள்ளப்பட்டன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சட்ட வைத்திய அதிகாரியிடமிருந்து அறிக்கையொன்றைக் கோரியுள்ளது.

2.5.8. நிகழ்வு இல.: HRC/AP/suomotu/01/09/2021 (S)

அவந்திதேவி சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் பெண் பிள்ளைகள் முறையற்ற விதத்தில் கவனிக்கப்படுவதாக அத தெரண தொலைக்காட்சியில் ஒளிபரப்பான "உகுஸ்ஸா நிகழ்ச்சி" ஊடாக தெரியவந்தது. மேலே குறிப்பிடப்பட்ட சிறுவர் இல்லத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளிடையே மதுபானம் பயன்படுத்தப்படும் வைபவவங்கள் நடாத்தப்படுவதாக அந்த நிகழ்ச்சி ஊடாக தெரியவந்தது. மேலும், சிறுவர் இல்லத்தில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக அறியக் கிடைத்தாலும் இது தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரச அதிகாரிகள் தவறியுள்ளனர். மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்வின் பின்னர் ஆணைக்குழு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் மற்றும் அனுராதபுரம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரிடமிருந்து அறிக்கைகளைக் கோரியது. அந்த அதிகாரிகளின் அறிக்கைகளுக்கமைய இது சம்பந்தமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2.6. கலந்துரையாடல்கள்

2.6.1. சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்துடனான கலந்துரையாடல்

கொவிட் - 19 தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள கைதிகள் சம்பந்தமாக ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்துடனான சந்திப்பொன்று 2021.05.12 ஆம் திகதி ஆணைக்குழுவில் இடம்பெற்றது. கொவிட் - 19 தொற்று நோய் நிலைமையின் கீழ் தடுப்பு நிலையங்களின் நிலைமை மற்றும் வைரஸ் தொற்றுக்குள்ளான கைதிகளுக்கு வழங்குப்படும் சிகிச்சை சம்பந்தமாக ஆணைக்குழுவினால் வினவப்பட்டது. இந்த நிலைமையின் கீழ்கைதிகளைப் பார்வையிடுவதற்கு அவர்களுடைய உறவினர்களுக்கு முடியாதிருப்பதனால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொடர்பாடல் வசதிகள் சம்பந்தமாகவும் ஆணைக்குழுவினால் மேலும் வினவப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின்போது தொற்று நொய் நிலவும் காலப் பகுதியில் கைதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள உடல் ஆரோக்கிய வசதிகள் தொடர்பாகவும் ஆணைக்குழுவினால் வினவப்பட்டது. அங்குணகொலபெலெஸ்ஸ சிறைச்சாலையில் கைதிகள் சித்திரவதைக்கு ஆளாகும் நிகழ்வு சம்பந்தமாகவும் அசேல சம்பத் என்பவர் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும்போது அவரை சித்திரவதைக்கு ஆளாக்கிய நிகழ்வு சம்பந்தமாகவும் ஆணைக்குழுவினால் தகவல்கள் வினவப்பட்டன. மேலும், சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு நிலையங்களில் ஏற்படும் குழப்ப நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்காக சிறைச்சாலைகள் திணைக்களம் எடுத்துள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் ஆணைக்குழுவினால் தகவல்கள் வினவப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலின்போது ஆணையாளர் நாயகத்திடம் கொவிட் - 19 நிலைமையின் கீழ் தடுப்பு நிலையங்களின் நிலைமை மற்றும் வைரஸ் தொற்றுக்குள்ளாகிய கைதிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் சம்பந்தமான பிரச்சினை முன்வைக்கப்பட்டது. கைதிகளை பீசீஆர் சோதனைக்குட்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கை மற்றும் சோதனைக்குட்படுத்தப்பட்ட கைதிகளை தனிமைப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை ஆணையாளர் நாயகம் விபரித்தார். அனைத்துக் கைதிகளையும் பீசீஆர் சோதனைக்குட்படுத்தப்பட்டு பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவுறுத்தப்பட்டதன் பின்னரே விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். அங்குணகொலபெலெஸ்ஸ சிறைச்சாலையில் ஏற்பட்ட நிகழ்வுக்கான காரணங்களை அவர் மேலும் விபரித்ததுடன் அதனை அவர்கள் முகாமைப்படுத்திய விதத்தையும் அவர் தெளிவுபடுத்தினார்.

கைதிகளுக்கு உடல் ஆரோக்கியப் பொருட்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அவர்களுடைய உறவினர்களுடன் வீடியோ அழைப்புக்களை எற்படுத்திக்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் பற்றியம் ஆணையாளர் விபரித்தார். குழப்ப நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் ஆபத்தின்றிய ஆயுதங்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியுமான அவசரப் படையொன்றை அமைக்கும் செயற்பாடு சம்பந்தமாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் விடங்களை முன்வைத்தார். சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு நிலையங்களில் கைதிகளை சித்திரவதை செய்யும் நிகழ்வுகள் அதிகரித்துள்ளமை சம்பந்தமாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வலியுறுத்தப்பட்டதுடன், அதற்குப் பதில் அளிக்கும் வகையில் சித்திரவதை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் உறுதியளித்தார்.

சிறைச்சாலைகளில் பீசீஆர் பரிசோதனைகளை அதிகரிப்பதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு பரிந்துரைகளை முன்வைக்குமாறு சிறைச்சாலைகள் பணிப்பாளர் நாயகம் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்ததுடன், தொற்று நோய் நிலவும் காலப் பகுதியினுள் தேவையற்ற விதத்தில் சந்தேக நபர்களை கைது செய்வதனைத் தவிர்த்துக்கொள்வதற்காக பொலீஸ் மா அதிபர் மற்றும் நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவுக்கு பரிந்துரைகளை முன்வைக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

2.6.2. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் சம்பந்தமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2021.12.29 ஆம் திகதி பொலீஸுடன் நடாத்திய கலந்துரையாடல்

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும். கைதிகள் சம்பந்தமாக வினவியபோது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் 3 உத்தியோகத்தர்களைக் கொண்ட ஆலோசனை சபையொன்று இருப்பதாகவும் கைதிகளுக்கு தமது கோரிக்கைகளை அந்தக் குழுவிடம் முன்வைக்க

முடியுமெனவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார். மேலும், தடுப்பு நிலையங்கள் மற்றும் கைது செய்யப்பட்டிருக்கும் கைதிகள் சம்பந்தமான தகவல்களையும் பணிப்பாளர் வழங்கினார். பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் கைதுகள் செய்யப்படுதல் தவிர இடமாற்றல் மற்றும் விடுவிப்பு மேற்கொள்ளப்படுவதில்லையென அறிவிக்கப்பட்டது. அது பற்றிய விபரங்களை எதிர்காலத்தில் பெற்றுத் தருவதாகவும் பணிப்பாளர் வாக்குறுதியளித்தார். மேலும், தடுப்பு நிலையங்களில் காணப்படும் வசதிகள் சம்பந்தமாகவும் தவிசாளரால் வினவப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் தடுப்பு நிலையங்களுக்கு வருகை தந்துள்ளதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார்.

விசாரிக்கப்பட்டுவரும் வழக்குகளில் கைதிகளின் எண்ணிக்கை, கைது செய்யப்பட்டிருக்கும் கைதிகளின் எண்ணிக்கை மற்றும் சகல ஆண்டுகளிலும் விடுவிக்கப்பட்டுள்ள/பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள/ குற்றவாளிகளான கைதிகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்களை ஆணைக்குழுவுக்கு அறியத்தருமாறு கோரப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களை விசாரிக்கும்போது பயங்கரவாத விசாரணைப் பிரிவின் துன்புறுத்தல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளரிடம் வினவப்பட்டது. அதற்குப் பதில் அளிக்கையில் வெளிநாடுகளிலிருந்து பாரிய வகையில் வெளிநாட்டு நாணயம் வருகின்றமை தொடர்பாக கண்டறியுமாறு மத்திய வங்கிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார். மேலும், பங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் சந்தேக நபர்களை விசாரணைகளின் பின்னர் நிலவும் சாட்சிகளின் அடிப்படையில் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்துவதாக பணிப்பாளர் தெரிவித்தார். அவர் தெரிவித்ததற்கமைய, சாட்சிகள் இல்லாதவிடத்து சந்தேக நபர்களை விடுவித்து புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்புவதற்கான வர்த்தமானி அறிவித்தலொன்று இருப்பதுடன், இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருவதுடன் அதனை அமுல்படுத்துவதனை நிறுத்துவதற்கான கட்டளையொன்றும் இருப்பதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

அத்தியாயம் 3:

ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை

3.1 அறிமுகம்

தேவையான கொள்கை ரீதியிலான தலையீடுகளை மேற்கொள்ளும்போது ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையை கண்காணிப்பதே இந்தப் பிரிவின் பிரதான பொறுப்பாகும். 1996 இன் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10(c), 10(d), 10(e), 10(f) மற்றும் 10(ப) ஆம் பிரிவுகளுக்கமைய இந்தக் கருப்பொருளின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3.2 தேசிய சிறைச்சாலைகள் தொடர்பான ஆய்வு பற்றிய பின்னூட்டல்

தேசிய சிறைச்சாலைகள் தொடர்பான ஆய்வின்போதான கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் இலங்கையின் சிறைச்சாலைகள், தண்டனை சட்டங்கள் மற்றும் சீர்திருத்த முறைகளைப் போன்றே விரிவான குற்றவியல் நியாய செயற்பாடுகள் பற்றிய புரிதலில் நிலவும் இடைவெளியை சுட்டிக்காட்டுவதுடன், சிறைச்சாலைகள் முறைமை சம்பந்தமான பொதுவான அறிவை அதிகரிப்பதுடன் அந்த முறைமையின் குறைபாடுகளையும் வெளிப்படுத்துகின்றது. சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் சரி செய்யும் முறையைப் பலப்படுத்துவதற்காக மிகச் சிறந்த பயன்பாடுகள் மற்றும் கொள்கைகளைத் தயாரிப்பதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் இவை காரணமாக அமையலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. பரிந்துரைகளை மீளாய்வுக்குட்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்காக குறித்த அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காக ஆணைக்குழுவினால் மையமொன்று தாபிக்கப்பட்டது. நீதி அமைச்சின் செயலாளர், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஆகியோருடன் சில மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. சிறைச்சாலை ஆளணியின் திறன் விருத்தி சம்பந்தமாக இங்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வலியுறுத்தப்பட்டது. சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தனது பயிற்சிப் பாட விதானங்கள் மற்றும் மொடியூல்களை மீளாய்வுக்காக சமர்ப்பித்தார்.

3.3. விசேட மேற்பார்வை மற்றும் தலையீடுகள்

3.3.1. "புரவி" சூறாவளி காரணமாக இடம் பெயர்ந்த மக்கள்

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்திய புரவி சூறாவளி காரணமாக பாதிப்புக்குட்பட்ட மக்கள் சம்பந்தமாக கவனத்தைச் செலுத்துவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இடியுடன்கூடிய மழை மற்றும் வெள்ளம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்ததுடன் அவர்களுடைய

வீடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு அவர்களுடைய சீவனோபாயம் மீது பாதிப்பை ஏற்படுத்தியது. அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் இயற்கை அழிவுகள் ஊடாக மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தினால் விசாரணையொன்று நடாத்தப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் "புரவி" சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிப்புக்குட்பட்ட மக்கள் தொடர்பாக விசாரணைகளின்போது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. பாதிப்புக்குட்பட்ட மக்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்வதற்காக ஒத்துழைப்பு வழங்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தினாலும் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டது.

3.3.2 பெருந்தோட்டப் பகுதி மக்களின் உரிமைகள்

இரத்தினபுரி மாவட்டத்தில் ஹுவுபே எனும் தோட்டத்தில் குடும்பமொன்றை அவர்களுடைய தற்காலிக குடியிருப்பிலிருந்து பலாத்காரமாக அகற்றியிருப்பதுடன், பின்னர் பெருந்தோட்ட அதிகார சபையின் அறிவுறுத்தலுக்கமைய பொலீஸாரினால் உடைத்து அகற்றப்பட்டது. அதன் பின்னர் அந்தக் குடும்பத்தை பொலீஸாரின் பொறுப்பின் கீழ் வைத்துக்கொள்ளப்பட்டதுடன், அவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதனைத் தவிர்ப்பதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு இரத்தினபுரி பொலீஸ் அத்தியட்சகரிடமிருந்து அறிக்கையொன்றைக் கோரியிருந்தது.

மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் தொலொஸ்பாகே பழைய வைத்தியசாலையை மூடிவிடுதல் சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வினவப்பட்டது. அதன் பெறுபேறாக இந்தப் பிரச்சினையில் தலையிட்டு தொலொஸ்பாகே பழைய வைத்தியசாலையின் பயனர்களின் சுகாதார உரிமைகளை உறுதிப்படுத்துமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு அறிவித்தது.

மண் சரிவு ஆபத்தைக் கொண்டுள்ள டிப்வின் தமிழ் பாடசாலை அமைந்துள்ள காணியை பார்வையிடுவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரமான கல்விக்கான வாய்ப்பு மற்றும் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு மீறப்படும் நிகழ்வொன்று சம்பந்தமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளர் அழைக்கப்பட்டார்.

3.3.3. அகதிகளின் உரிமைகள்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆப்கானிஸ்தான் நாட்டவர் இருவரை வெளிநாட்டவர் தடுப்பு நிலையத்தில் தடுத்து வைத்திருக்கும் நிலைமை சம்பந்தமாக சிவில் சமூகத்தினூடாக இலங்கை மனித

உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திடமிருந்து அறிக்கையொன்று கோரப்பட்டு தடுத்து வைத்திருப்பதற்கான காரணம் மற்றும் அவர்களுடைய நிலைமை சம்பந்தமாக தெளிவுபடுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

	தலைமை அலுவலகம்	அம்பாறை	அனுராதபுரம்	மட்டக்களப்பு	பதுளை	யாழ்ப்பாணம், கிளிநொச்சி	கண்டி	கல்முனை	மாத்தறை	திருகோணமலை	வவுனியா, மன்னார்	மொத்தம்
பொலீஸ் நிலையங்கள்	141	31	71	81	20	17	28	26	15	19	24	473
சிறைச்சாலைகள்	05	02	-	06	03	-	04	02	06	02	02	32
சிறுவர் இல்லங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு இல்லங்கள்	-	-	01	-	-	-	01	02	1	-	-	05
புலம்பெயர்ந்துள்ள வெளிநாட்டவர்கள் தடுப்பு நிலையங்கள்	-	02	-	-	-	-	-	-	-	-	-	02
புனர்வாழ்வு நிலையங்கள்	01	-	-	-	-	-	-	-	-	-	-	01
முதியோர் இல்லங்கள்	-	02	-	-	-	-	01	-	-	-	-	03
பயங்கரவாத விசாரணைப் பிரிவு / குற்றப் புலனாய்வுப் பிரிவு	04	-	-	-	-	-	-	-	-	-	1	05
ஏனைய நிலையங்கள்	02	-		-	-	06	-	-	-	-	-	08
மொத்தம்	153	37	72	87	23	23	34	30	22	21	27	529

3.3.4. வீட்டுப் பணியாளர்களாக சிறுவர்களை ஈடுபடுத்துவதனை இல்லாதொழித்தல்

கொழும்பில் வீட்டுப் பணிப் பெண் ஒருவரின் மரணம் சம்பந்தமாக அறியக் கிடைத்ததுடன், அவர் 18 வயதிலும் குறைந்த சிறுமியெனத் தெரிய வந்தது. இந்த மரணம் சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடும் கவனம் ஈர்க்கப்பட்டதுடன், சிறுவர் வீட்டுப் பணியாளர்கள் சம்பந்தமாக விசேட கலந்துரையாடலொன்றை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.இலங்கை சிறுவர்

பாதுகாப்பு அதிகார சபையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர சில்வா, மன நல மருத்துவர் துலங்கி தஹநாயக்க, மனித உரிமைகள் இல்லத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜீவன் தியாகராஜா ஆகியோருடன் ஆணைக்குழு விசேட கலந்துரையாடலொன்றை நடாத்தியது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீடு உடனடியாகத் தேவைப்படும் பிரிவுகளைக் கண்டறிவதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும்.

3.4. தடுப்பு நிலையங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களைக் கண்காணித்தல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அதன் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் வலையமைப்பினூடாக 2021 ஆம் ஆண்டில் 473 பொலீஸ் நிலையங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டது. இந்த சோதனைகளின் நோக்கம் என்னவெனில், வினைத்திறன்மிக்க மற்றும் பதில் நடவடிக்கைகள் ஊடாக இலங்கையில் சித்திரவதை செய்தல் மற்றும் வேறு விதமான பொறுப்புக்கள் மீறப்படுதலைத் தவிர்த்தல், அவ்வாறான மீறுதல்களை மேற்கொள்ளும் அலுவலர்களை இனங்கண்டுகொள்ளல் மற்றும் சரி செய்து கொள்வதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதுமாகும். சித்திரவதை செய்தல் மற்றும் ஏனைய மனித உரிமைகள் மீறல்களை தடுப்பதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு ஏனைய தொடர்புடைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்கின்றது. இதற்கமைய, சித்திரவதை செய்தல்,

சட்ட விரோதமான கைதுகள் மற்றும் தடுத்து வைப்புக்கள் போன்ற விடயங்கள் சம்பந்தமாக முறைப்பாடுகளைப் பொறுப்பேற்பதற்காக 24 மணி நேரமும் துரித அழைப்புக்கள் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆணைக்குழு எதிர்பாராத அவசர விஜயங்கள் மற்றும் விசாரணைகளை மேற்கொள்ளும்போது அந்த இடம் தொடர்பாக தற்போது நிலவும் வழக்குகள் சம்பந்தமாகவும் பின்னூட்டலை மேற்கொள்வதற்காக அது தொடர்பாக அலுவல் மேற்கொள்ளும் அலுவலர் பங்குபற்றுவார்.

இந்த விஜயத்தின்போது சில பொதுவான பிரச்சினைகள் இனங்கண்டுகொள்ளப்பட்டன.

- தடுப்பு நிலையங்களில் கைதுகள் சம்பந்தமான வழக்குகள் உரிய முறையில் குறித்துக்கொள்ளப்படாமை
- அதிக நெரிசல் மற்றும் சிறைக்கூடங்களினுள் அடிப்படை வசதிகள் இல்லாதிருத்தல்
- கைது செய்யும்போது உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டிராமை
- அதிக எண்ணிக்கையான சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தபோதிலும் கைதிகள் தவறு.்.குற்றம் புரிந்துள்ளதாகத் தெளிவுபடுத்துவதற்கு பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு முடியாதிருத்தல்.

சித்திரவதை செய்தல், முறையற்ற விதத்தில் கவனித்தல் மற்றும் தடுப்பு நிபந்தனைகள் தொடர்பான கொள்கை ரீதியிலான தலையீடுகளின்போது மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த அவதானிப்புக்களை தொடர்ந்தும் எழுப்புகின்றது.

மேலும், ஆணைக்குழுவினால் 56 ஏனைய தடுப்பு நிலையங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் தொடர்பான கண்காணிப்பு விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன. பொதுவாக இந்த விஜயங்கள் அநேகமாக பிராந்திய அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. கைதிகளின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக தடுப்பு நிலையங்களைக் கண்காணிப்பதற்கு ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ள அதிகாரத்திற்கமைய பிராந்திய மற்றும் உப அலுவலகங்களின் கண்காணிப்பு நடவடிக்கைகள் மிகவும் முக்கியமாகும். எவ்வாறாயினும், மீண்டும் கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக ஊழியர் பற்றாக்குறையின் பெறுபேறாக 2021 ஆம் ஆண்டில் கண்காணிப்பு விஜயங்களின் அதிக எண்ணிக்கை (153) தலைமை அலுவலகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டன.

கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக ஏற்பட்ட ஆளணிப் பற்றாக்குறை காரணமாக முன்னைய ஆண்டுகளைப் பார்க்கிலும் குறைந்த எண்ணிக்கையான சோதனை விஜயங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சித்திரவதையைத் தடுப்பதற்கு மற்றும் தடுப்பு நிலையங்களின் நிலைமையை மேம்படுத்துவதற்கு ஆணைக்குழு சிறப்பான வகையில் தனது தலையீட்டை மேற்கொண்டது. அதற்கமைய, தடுப்பு நிலையங்களின் நிபந்தனைகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கீழ் குறிப்பிடப்படும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன:

கைதிகளை தடுத்து வைத்தல் நிலைமைகள், சித்திரவதை செய்தல் மற்றும் சிறைக் கைதிகளிடையே கொவிட் - 19 தொற்றுவதனை முகாமைப்படுத்தல், சிறைக் கைதிகளின் உடல் நலம் மற்றும் சிறப்பான இருப்பு மற்றும் கொவிட் - 19 தொற்று நோய் நிலைமையின் கீழ் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ளல் சம்பந்தமாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துடன் கூட்டமொன்று நடாத்தப்பட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கிடையில் தொடர்பாடலை துரிதப்படுத்துவதற்காக மையமொன்றை தாபித்தல் சம்பந்தமாகவும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

3.4.1. தடுப்பு ஆணைகளைப் பதிவு செய்தல்

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் அல்லது பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் (10 ஆம் அத்தியாயம்) கீழான ஒழுங்குவிதிகளின் கீழ் நபரொருவரை கைது செய்து அல்லது தடுத்து வைத்திருக்கும்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 28 ஆம் பிரிவிற்கமைய அவ்வாறான கைது அல்லது தடுத்து வைத்தலை மேற்கொள்ளும் அலுவலரின் கடமை என்னவெனில் அவ்வாறான கைதுகள் அல்லது தடுத்து வைப்புக்கள் அல்லது கைது செய்யப்பட்டிருப்பவர்களை விடுவிக்கும்போது அல்லது இடமாற்றும்போது அது சம்பந்தமாக ஆணைக்குழுவுக்கு

அறிவிப்பதாகும். ஆணைக்குழு 2021 ஆம் ஆண்டில் தடுத்து வைப்புக்கள் தொடர்பாக பதிவேடொன்றைப் பேணி வருகின்றது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் 92 கைதுகள் மற்றும் தடுத்து வைப்புக்கள் தொடர்பான நிகழ்வுகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

3.5. கொவிட் - 19 தடுப்பூசிக்கு முன்னுரிமை அளித்தல்

தடுப்பூசிக்கான உயர் கேள்வி மற்றும் தடுப்பூசி வழங்கப்படும் நிலையங்களைச் சூழவிருந்த மக்களைக் கவனத்திற்கொண்டு கொவிட் - 19 தடுப்பூசிக்கு முன்னுரிமை வழங்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 2021.05.28 ஆம் திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய கொவிட் தடுப்பு செயற்பாடுகளில் முன்னணி வகித்த சுகாதார ஊழியர்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும்போது தொற்றுக்குள்ளான நபர்களுடன் நேரடியாக தொடர்புபடும் ஏனைய நபர்கள் மற்றும் பாதிப்புக்குட்பட முடியுமான நபர்களுக்கு (வயது அல்லது உடல் ஆரோக்கிய நிலைமை காரணமாக) முன்னுரிமை வழங்கப்படல் வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

3.6. தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறும் நபர்களை கைது செய்தல் தொடர்பான வழிகாட்டல்கள்

தனிமைப்படுத்தல் சட்டம், ஒழுங்கு விதிகளின் கீழ் நபர்களைக் கைது செய்தலைக் கவனத்திற்கொண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மக்களின் சிவில் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த வழிகாட்டல்களை பொலீஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்டன. அதற்கமைய, இலங்கையின் அனைத்துப் பொலீஸ் நிலையங்களுக்கும் வழிகாட்டல்களை விநியோகிப்பதற்கு கொழும்பு பொலீஸ் தலைமையகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்கமைய பொலீஸ் நிலையங்களினால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

3.7. கொவிட் - 19 தொற்று நோயிலிருந்து சிறைக் கைதிகளைப் பாதுகாத்தல் தொடர்பான பரிந்துரைகள்

சிறைச்சாலைகளில் பீசீஆர் சோதனைகளை அதிகரிப்பதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு பரிந்துரை செய்யுமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், தொற்று நோய் நிலவும் காலப் பகுதியினுள் தேவையற்ற விதத்தில் சந்தேக நபர்களைக் கைது செய்வதனைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பொலீஸ் மா அதிபருக்கும் நீதி சேவைகள் ஆணைக்குழுவுக்கும் பரிந்துரை செய்யுமாறும் கோரிக்கை விடுத்திருந்தமை முக்கிய விடயமாகும்.

அத்தியாயம் 04

கல்வி மற்றும் வெளிவாரியான செயற்பாடுகள்

4.1. அறிமுகம்

மனித உரிமைகளை விருத்தி செய்தல் மற்றும் பாதுகாத்தல் ஆணைக்குழுவின் இருப்பின் நோக்கமாக இருப்பதனால் ஆணைக்குழு பொது மக்களை தனது கடமைகளின் கட்டாய அங்கமாகக் கருதுகின்றது. கொவிட் - 19 தொற்று நோய் நிலைமைக்கு மத்தியிலும், 2021 ஆம் ஆண்டில் அதன் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக முக்கியமான பல அலுவல்களை ஏற்பாடு செய்து நடாத்தியுள்ளது.

4.2. சர்வதேச ஞாபகார்த்த தின வைபவங்கள்

4.2.1 சித்திரவதைக்கு ஆளானோருக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினம் - 2021

சித்திரவதைக்கு ஆளானோர்களுக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு ஆணைக்குழுவின் தவிசாளர் விசேட செய்தியொன்றை வெளியிட்டார். மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நாடு பூராவும் சித்திரவதைக்குட்படுத்தல் மற்றும் தீமை பயக்கும் வகையிலான கவனிப்புக்களை அவதானிக்க முடியுமாக இருந்ததாக சுட்டிக்காட்டினார். எனவே, இலங்கையிலிருந்து சித்திரவதையை இல்லாதொழிப்பதற்கான இரு தரப்பு அணுகுமுறையுடன் ஆணைக்குழு சித்திரவதைக்கு ஆளாகியோரைப் பாதுகாப்பதற்கு மற்றும் சித்திரவதை அல்லது மனிதாபிமானமற்ற, குரூரமான அல்லது அவமதித்தலை தடுக்கும் பொறிமுறையை பலப்படுத்துவதற்காக விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் நிரந்தர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பூச்சிய பொறுமைகாக்கும் கொள்கைளை பேணி வருகின்றது. "சித்திரவதையை நிறுத்துங்கள்" எனும் தொனிப் பொருளின் கீழ் ஆணைக்குழுவின் 10 பிராந்திய அலுவலகங்களினூடாக நாடளாவிய ரீதியில் சித்திரவதை எதிர்ப்புத் திட்டமொன்றை ஆணைக்குழு ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. சித்திரவதை செய்தல் மற்றும் மனிதாபிமானற்ற முறையில் கவனித்தல் சம்பந்தமாக பொது மக்களுக்கு வழிப்புணர்வூட்டல் இத்திட்டத்தினூடாக மேற்கொள்ளப்படுவதுடன், அதனூடாக சித்திரவதையைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கு பொது மக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கும், மக்களின் நடத்தைகளுக்கு வழிகாட்டலை வழங்குவதற்கும் ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது. மேலும், எந்த விதமான விதிவிலக்குகளுமின்றி சகல வகையான சித்திரவதைகள் மற்றும் தீமை பயக்கும் வகையிலான கவனிப்புக்களைத் தடுப்பதற்கு மற்றும் சித்திரவதைக்கு மற்றும்ட ஏனைய வன்முறைகளுக்கு ஆளாகிய அனைவரையும் பாதுகாப்பதற்கு பயன்மிக்க நடவடிக்கைகளை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் தொடர்புடைய அனைத்து அதிகாரிகளிடமும் வேண்டுகோள் விடுத்தார்.

சித்திரவதையை தடுத்தல் சம்பந்தமாக விழிப்புணர்வூட்டல் திட்டங்கள்

"சித்திரவதையை நிறுத்துங்கள் ˙ மனித உரிமைகள் தூரநோக்கு" எனும் தொனிப் பொருளில் பொலீஸ் கல்வியியல் கல்லூரியுடன் இணைந்து நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் பொலீஸ் உத்தியோகத்தர்களுக்காக இந்தத் திட்டம் இணைய வழியில் நடாத்தப்பட்டது. மேலும், இந்த நிகழ்வை தொடங்கி வைக்குமுகமாக தொலைக்காட்சிக் கலந்துரையாடலொன்றும் யாழ்ப்பாணத்தில் னுயுமே வுஏ ஊடாக ஒளி பரப்பப்பட்டது.

4.2.2 சர்வதேச மகளிர் தினம்

சமூகத்தில் ஆண் பெண் சமத்துவத்தின் மீது கொவிட் - 19 தொற்று நோயின் தாக்கம் மீது கவனத்தைச் செலுத்தி ஆணைக்குழுவினால் சர்வதேச மகளிர் தினம் நினைவுகூரப்பட்டது. பொது சுகாதாரத்திற்கு, கல்விக்கு, சமூக வாழ்க்கைக்கு மற்றும் தொழில் சந்தைக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தல் போன்ற கொவிட் - 19 தொற்று நோயின் தீமை பயக்கும் வகையிலான பாதிப்புக்களைக் கவனத்திற்கொண்டு தொற்று நோய் காரணமாக சமூகத்தில் பெண்களின் துன்பங்களை உக்கிரப்படுத்தும் சமூக சமத்துவமின்மை மீது கவனத்தைச் செலுத்தல், இந்த ஆண்டின் மகளிர் தினத்தை நினைவு கூருவதற்காக இந்தத் தொனிப் பொருளை தெரிவு செய்வதற்கான பிரதான நோக்கமாக இருந்தது. இந்த நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கைக்கான நோர்வே நாட்டின் தூதுவர் அதி மேதகு திருமதி ட்ரயின் ஜொரான்லி எஸ்கெடல் அவர்கள் பிரதான உரையை நிகழ்த்துகையில், உலகில் பெண்கள் உரிமைகளின் முன்னேற்றத்தை மீளத் திருப்புவதற்கு தொற்று நோய் தாக்கம் செலுத்தியுள்ளதாக மெலின்டா கேட்ஸ் இன் நூலாக்கமைய "*குரலைக் கொண்டுள்ள பெண் என்றால் பலம்மிக்க பெண்* " எனச் சுட்டிக் காட்டினார். ஆனாலும் ''அந்தக் குரலைக் கண்டறிதல் மிகச் சிரமமான விடயமாக இருக்கலாம்." என்றார். 2021 ஆம் ஆண்டில் சர்வதேச மகளிர் தினத்தைக் நினைவுகூருவதற்கு மற்றும் பெண்களின் உரிமைக்காக குரல் எழுப்புவதற்கு நோர்வே நாட்டின் தூதுவராலயத்திற்கு ஆணைக்குழுவுடன் இணைந்து ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ள முடியுமாக இருத்தல் சம்பந்தமாக பெருமிதமடைவதாகவும் தெரிவித்தார். இந்த வைபவம் அறிஞர்களின் முன்னிலைப்படுத்தல்கள் மற்றும் கலந்துரையாடல்களைக் கொண்டதாக இருந்ததுடன், அது ஐரோப்பிய சங்கத்தின் அரசியல், வர்த்தக மற்றும் தொடர்பாடல் பிரிவிற்கான இலங்கைத் தூதுக் குழுவின் பிரதானி திரு தோர்ஸ்ட்டன் பாக்ப்ரெடீ அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

4.2.3 சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2021

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2021 ஆம் ஆண்டின் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை நினைவுகூருவதற்காக "அனைவரும் மனிதர்கள்" எனும் தொனிப் பொருளின் கீழ் இலத்திரனியல் ஊடகங்களின் உதவியுடன் பல ஊடகக் கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. மனித உரிமைகள் சம்பந்தமாக பொது மக்களுக்கு வழிப்புணர்வூட்டும்போது இலத்திரனியல் ஊடகம் முக்கியமான ஊடகமொன்றென ஆணைக்குழு ஏற்றுக்கொள்கின்றது. அதற்கமைய, சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிறுத்தி 06 தொலைக்காட்சி அலைவரிசைகளில் மற்றும்

பல வானொலி அலைவரிசைகளில் மனித உரிமைகள் சம்பந்தமான பல்வேறு நிகழ்ச்சிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது. சர்வதேச மனித உரிமைகள் தினத்தை நினைவுகூருமுகமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய நிலையங்களினாலும் வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. (நடாத்தப்பட்ட ஊடக நிகழ்ச்சிகள் பற்றிய விபரம் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

திகதி	நிகழ்ச்சி	வளவாளர்கள்
2021.12.06	சியத்த தொலைக்காட்சி – பியும்வில	1. வைத்தியர் நிமல் கருணாசிரி, ஆணையாளர் 2. திரு.நிஹால் சந்திரசிரி, பணிப்பாளர் - ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை
2021.12.06	இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - சுதேச சேவை	வைத்தியர் நிமல் கருணாசிரி, ஆணையாளர்
2021.12.09	இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - தமிழ்	கபிலன் வில்லவராஜன் - சட்ட அலுவலர்
2021.12.10	இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - சுதேச சேவை - சந்தலிய செவன	1. திருமதி மேனகா ஹேரத், பணிப்பாளர் - கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் 2. சுலாரி லியனகம – பணிப்பாளர் - புலனாய்வு மற்றும் விசாரணை
2021.12.10	சவெல் - நேத்ரா ரீவீ	கபிலன் வில்லவராயன் - சட்ட அலுவலர்
2021.12.10	தெரண ரீவீ - பிக் போகஸ்	1. வைத்தியர் நிமல் கருணாசிரி, ஆணையாளர் 2. சுமனலால் வீரசிங்க, பிரதிப் பணிப்பாளர் - புலனாய்வு மற்றும் விசாரணை
2021.12.10	ரூபவாஹினி	1. வைத்தியர் நிமல் கருணாசிரி, ஆணையாளர் 2. சுமனலால் வீரசிங்க, பிரதிப் பணிப்பாளர் - புலனாய்வு மற்றும் விசாரணை

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை நினைவுகூருவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக நிகழ்ச்சிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

திகதி	பிராந்திய நிலையம்	நிகழ்ச்சி
2021.12.10	மட்டக்களப்பு	சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2021 தொலைக்காட்சி நிகழ்ச்சி னுயுமே வுஏ
2021.12.09	திருகோணமலை	சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2021, பொது மக்களுக்கான இரண்டு இணையவழிக் கருத்தரங்குகள்
2021.12.10	மாத்தறை	சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2021, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், றுஹுணு குஆ
2021.12.06 முதல் 2021.12.10 வரை	யாழ்ப்பாணம்	மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வடக்கு அலுவலகத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதெப்படி என்பது சம்பந்தமாக 30 செக்கன் விளம்பரம் னுயுமே வுஏ
2021.12.10	அனுராதபுரம்	அனுராதபுர மாவட்ட பிரதேச சபை பெண் பிரதிநிதிகளுக்காக நடாத்தப்பட்ட இணையவழிக் கருத்தரங்கு
2021.12.10	கண்டி	சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2021, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கந்துரட்ட சேவை
2021.12.09- 2021.12.10	கல்முனை	சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்ச்சி – Darussabah TV கல்முனை மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்ச்சி Zoom Meeting

4.3. மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சித் திட்டங்கள்

ஆணைக்குழுவினால் தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் சில வழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

4.3.1 விழிப்புணர்வூட்டல் திட்டங்கள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் மற்றும் வவுனியா பிராந்திய அலுவலகம் இணைந்து 2021 திசெம்பர் மாதம் 14 மற்றும் 15 ஆகிய திகதிகளில் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கடற்படை உத்தியோகத்தர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கான நிதியுதவி UNHCR இனால் வழங்கப்பட்டது. இதில் சுமார் 100 பேர் பங்குபற்றினர். இந்தத் திட்டங்களின் முக்கிய நோக்கம் என்னவெனில், மனித உரிமைகள் கோணத்தில் தமது கடமைகளை நிறைவேற்றுதல் சம்பந்தமாக கடற்படை உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவதாகும்.

4.4. ஏனைய அரச நிறுவனங்கள் / நிகழ்ச்சித் திட்டங்களுடன் அறிவைப் பகிர்ந்துகொள்ளல்

ஆணைக்குழு, அதன் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களினூடாக ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வளவாளர்களை வழங்குவதனூடாக தனது பங்களிப்பை வழங்குகின்றது. ஏனைய அரச நிறுவனங்களினால் ஆணைக்குழுவின் விடயப் பரப்புடன் தொடர்பான கலந்துரையாடல்களுக்கு முனைப்புடன் பங்களிப்பை வழங்கியது. 2021 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களினூடாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பணியிடங்களில்பாலியல் துன்புறுத்தல்கள், சிறுபான்மையினரின் உரிமைகள், பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு போன்ற ஆர்வம் காண்பிக்கும் தலைப்புக்கள் சம்பந்தமாக உரைகள் நிகழ்த்தப்பட்டதுடன், கலந்துரையாடல்களிலும் பங்குபற்றினர்.

அத்தோடு, பாலினத்தை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகள், இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை உத்தியோகத்தர்கள், பொலீஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய சில சமூக குழுக்கள் முகங்கொடுக்கும் மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சிக்கல்கள் சம்பந்தமாக ஊடகவியலாளர்களுக்கு புரிந்துணர்வொன்று இருத்தலின் முக்கியத்துவம் போன்ற விடயங்கள் சம்பந்தமாக நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களுக்கும் ஆணைக்குழுவின் பங்களிப்பு வழங்கப்பட்டது. குறித்த செயற்பாடுகள் சம்பந்தமான விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2021 இல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் ஊடாக நடாத்தப்பட்ட மனித உரிமைகள் சம்பந்தமான விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சி திட்டங்கள்

	தலைமை அலுவலகம்
பயிற்சியளிப்பு	06
உரை நிகழ்த்தல்	05
கூட்டங்கள், செயலமர்வுகள்	07
இணையவழி கருத்தரங்குகள்	01

2021 இல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்களினால் வழங்கப்பட்ட உரைகளுக்கான வளப் பங்களிப்பு

தலைமை அலுவலகம் / பிராந்திய அலுவலகங்கள்	இலக்காகக் கொள்ளப்பட்ட குழுக்கள்			
	இராணுவப்படை / பொலீஸ்	அரச ஊழியர்கள்	மாணவர்கள் /இளைஞர் குழுக்கள்	பொதுமக்கள் /சிவில் அமைப்புக்கள்/மதத் தலைவர்கள் / ஊடகவியலாளர்கள் ஏனையவை
அம்பாறை	01	--	--	--
அனுராதபுரம்	07	--	01	07
பதுளை	04	--	03	--
மட்டக்களப்பு	--	01	03	01
யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி	01	02	02	02
கல்முனை	--	02	--	05
மாத்தறை	01	--	--	04
திருகோணமலை	--	--	01	01

4.5 ஊடகங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளல்

ஆணைக்குழு தனது செயற்பாடுகள் சம்பந்தமாகப் போன்றே முக்கியமான விடயங்கள் சம்பந்தமாக பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்காக ஊடகங்களுடன் தொடர்புகொள்வதற்கு முன்னுரிமை அளிக்கின்றது. ஆணைக்குழுலானது ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக அச்சு ஊடக முறைகளைப் போன்றே இணையவழித் தளத்தையும் பயன்படுத்துகின்றது.

4.5.1. இணையவழித் தளங்கள் மற்றும் துரித அழைப்புக்கள் சேவைகளைப் பயன்படுத்தல்

ஆணைக்குழுவின் கொள்கை சார்ந்த பரிந்துரைகள், தலையீடுகள் மற்றும் ஆலோசனைகள் வெளியீடுகளைப் போன்றே ஆணைக்குழுவின் பணிப்புக்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு பொது மக்களுக்கு அவற்றை அணுக முடியுமான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் இணையத்தளம் நிதமும் இற்றைப்படுத்தப்படுவதனால் மனித உரிமைகள் ஆணைக்குழு சம்பந்தமான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு இது நம்பகமான ஆதாரமாகும். கொவிட் - 19 தொற்று நோய் நிலைமையின் கீழ் அது மேலும் விரிவடைந்ததுடன், எந்த விதமான சிரமமுன்றி ஆணைக்குழுவுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. 24 மணி நேரமும் செயற்படுத்தப்படும் துரித அழைப்பு சேவை ஊடாக பொது மக்களுக்கு எந்தவொரு அவசர நடவடிக்கைக்கும் ஆணைக்குழுவுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுவதுடன், உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கைதுகள் மற்றும் தடுத்து வைப்புக்கள் சம்பந்தமாக துரித நடவடிக்கைகளை எடுப்பதற்கு புலனாய்வு உத்தியோகத்தர்கள் பொது மக்களுக்கு உதவி புரிகின்றனர்.

4.6. சிவில் அமைப்புக்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலக வலையமைப்புக்கள் ஊடாக சிவில் அமைப்புக்களுடன் நிதமும் தொடர்புகொண்டுள்ளது. பிரஜைகளின் பிரதிநிதிகளாக சிவில் சமூக அமைப்புக்கள், பொது மக்கள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கிடையில் இணைப்பைக் கட்டியெழுப்பி பொது மக்களின் மனித உரிமைகள் மீது ஆணைக்குழுவின் கவனம் ஈர்க்கப்படுவதுடன் ஆணைக்குழு மனித உரிமைகள் சம்பந்தமாக சிவில் சமூகத்தின் நடவடிக்கைகளுக்கு பங்களிப்பை வழங்குகின்றது. புதிதாக நியமிக்கப்பட்ட ஆணையாளர்கள் 2021 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்கள் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களின்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று பிரதேச மட்டத்திலான சிவில் அமைப்புக்களைச் சந்தித்தனர். சமூக பிரதிநிதிகளால் எழுப்பப்பட்ட சிக்கல்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அரச நிறுவனப் பிரதானிகளின் கவனத்திற்கு கொண்டு வந்ததன் நோக்கம் அந்த சிக்கல்களுக்கு தீர்வு காணும் நோக்கத்திலாகும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தேசிய மட்டத்திலான சிவில் சமூக அமைப்புக்களுடன் குழுக் கூட்டமொன்றை தலைமை அலுவலகத்தில் நடாத்தியது. இந்தக் கூட்டத்தின் நோக்கம், தற்போது நிலவும் மனித உரிமைகள் தொடர்பான சிக்கல்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களினால் அந்த சிக்கல்களுக்காக இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ள தீர்வுகள் தொடர்பாக கலந்துரையாடுவதாகும். கொவிட் - 19 கட்டுப்பாடுகள் காரணமாக ஆணைக்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்ட சிவில் சமூக அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டியேற்பட்டது. இந்தக் கூட்டத்தில் கலாநிதி ஜெஹான் பெரேரா – தேசிய சமாதான சபை, சட்டத்தரணி

திரு.லக்ான் டயஸ், திரு.பிலிப் திசாநாயக்க – சுபாவள வழ டுகைந, சமிலா து'ாரி – தாபிந்து கூட்டமைப்பு, திரு.பிரபோத ரத்னாயக்க - சுபாவள ழேற, செல்வி ரனித்தா ஞானராஜா – மனித உரிமைகள் மேம்பாட்டு நிலையம் மற்றும் அருட்தந்தை மஹேந்திர குணதிலக்க – கரிட்டாஸ் ஸ்ரீலங்கா, செடெக் நிறுவனம்.

4.6.1. பிரதேச சிவில் அமைப்புக்கள் ஒருங்கிணைப்புக் குழுக்கள்

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பிராந்திய அலுவலக வலையமைப்பு ஊடாக அமைக்கப்பட்ட பிரதேச மட்டத்தில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக்கள் குறித்த பிரதேசங்களில் நிகழும் மனித உரிமைகள் மீறல்களை இனங்கண்டுகொள்ளல் மற்றும் ஆணைக்குழுவின் தலையீடுகளுக்கான தேவைப்பாட்டை இனங்கண்டுகொள்வதற்கு ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன. அடுத்ததாக முக்கியமாக உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்களின் கவனத்தை இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கள் ஊடாக கவர்ந்துகொள்வதற்கு முடியுமாகியது. இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கள், பிரதேச ரீதியாக மனித உரிமைகளை பாதுகாப்பதனை கண்காணிக்கும்போது ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன.

4.6.2. சிவில் சமூக அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட வைபவங்களில் பங்கேற்றல்

சிவில் சமூக அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட சில வைபவங்களுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் மற்றும் ஆளணி அங்கத்தவர்கள் பங்குபற்றினர். அவற்றினிடையே 2021.03.16 ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் வர்த்தகம் மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமான தெற்காசிய ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட தெற்காசியாவின் கொவிட் - 19 இற்குப் பின்னரான நிலைமை பற்றிய கூட்டத்தில் பங்குபற்றியமை மற்றும் மனித உரிமைகள் பற்றிய வள நிலையத்தின் பிரதிநிதிகளுடன் பொறுப்புடனான வர்த்தகங்கள் மற்றும் மனித உரிமைகள் எனும் தலைப்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்குபற்றியமையைக் குறிப்பிடலாம்.

4.6.3. சிவில் சமூக அமைப்புக்களுக்கான பயிற்சியளிப்பு

கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக விதிக்கப்பட்ட வரையறைகளுக்கு மத்தியில் சிவில் சமூக அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்காக பயிற்சி மற்றும் உணர்திறன் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு ஆணைக்குழு முன்னின்று நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மீளாய்வாண்டில் அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்ட செயற்பாடுகளிடையே மட்டக்களப்பில் மத அமைப்பொன்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் சம்பந்தமான பயிற்சிப் பட்டறை மற்றும் கல்முனை மானிட மேம்பாட்டு அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு ணுழழஅ தொழில்நுட்பத்தினூடாக நடாத்தப்பட்ட மொழி உரிமைகள் பற்றிய கலந்துரையாடல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அத்தியாயம் 5

சர்வதேச ஒத்துழைப்பு

5.1 அறிமுகம்

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க ஆணைக்குழுச் சட்டதினூடாக செயல்வலுப் பெறச் செய்யப்பட்டிருக்கும் பிரகாரம் இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் இயைந்திருப்பதனை விருத்தி செய்யும்போது 2021 ஆம் ஆண்டிலும் ஆணைக்குழுவானது சர்வதேச மற்றும் பிராந்திய மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் பாதுகாப்புப் பொறிமுறைகளுடன் முனைப்புடன் தொடர்பாடல் மற்றும் ஒத்துழைப்பு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டுள்ளது.

5.2 பிராந்திய மனித உரிமைகள் அமைப்புக்களுடன் தொடர்புகளை பலப்படுத்திக்கொள்ளல்

2021 செப்தெம்பர் மாதம் 15 மற்றும் 16 ஆகிய திகதிகளில் இணையவழி ஊடாக நடாத்தப்பட்ட ஆசிய பசுபிக் ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஒன்றியத்தின் அங்கத்தவர் என்ற வகையில் 25 உறுப்பு நாடுகளுடன் ஏனைய தேசிய மனித உரிமைகள் அமைப்புக்களின் கண்காணிப்புப் பிரதிநிதிகளுடன் முனைப்புடன் பங்குபற்றியது. ஆசிய பசுபிக் ஒன்றியத்தின் என்பது தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுக்கான பிராந்தியத்தின் ஒருங்கிணைப்பு நிறுவனமாகும்.

5.3 பிரித்தானிய உயர் ஸ்தானிகருடனான கலந்துரையாடல்

ஆணைக்குழு 2021 யூன் மாதம் 01 ஆம் திகதி பிரித்தானிய உயர் ஸ்தானிகர் அதிமேதகு சாரா ஹல்ட்டன் அம்மையாருடன் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் Zoom தொழில்நுட்பத்தினூடாக கலந்துரையாடலொன்றை நடாத்தப்பட்டது. நாட்டில் நிலவும் மனித உரிமைகள் தொடர்பான சிக்கல்கள் மற்றும் ஆணைக்குழுவின் தற்போதைய மனித உரிமைகள் தொடர்பான தலையீடுகள் சம்பந்தமாக இங்கு கலந்துரையாடப்பட்டது.

5.4 ஐரோப்பிய ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்

இலங்கைத் தொழிலாளர்களின் சட்ட ரீதியான பாதுகாப்பை இலக்காகக்கொண்டு மற்றும் அவர்களுடைய மனித உரிமைகள் தொடர்பான நிலைமைகளைப் பாதுகாப்பதற்காக எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடும் நோக்கில் ஐரோப்பா

ஆணைக்குழுப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்தனர். தொழில் துறையுடன் இணைந்து செயற்பட்டாலும் ஐரோப்பிய சங்கத்திடம் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு இல்லாத தொழிலாளர் அமைப்புக்களின் பங்கேற்புடன் இந்தக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. பியகம மற்றும் கட்டுநாயக்க ஏற்றுமதி சுதந்திர வர்த்தக வலயத்தில் பிரதானமாக செயற்படாத தொழிலாளர் அல்லாத அமைப்புக்களுக்கும் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. 2021.09.24 ஆம் திகதி நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலுக்கு அவ்வாறான 05 அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல பிரதிநிதிகள் பங்குபற்றினர். இந்தக் கலந்துரையடலின்போது பிரதானமாக நாட்டில் நிலவும் ஜனநாயக நேய சமூகமொன்றுக்கும் தேவையான சிறப்பு அடையாளங்கள் மற்றும் தற்போது காணப்படும் தொழிலாளர் உரிமைகள் மீது தீமை பயக்கும் வகையில் பாதிப்புச் செலுத்தும் விடயங்கள் மீது கவனம் ஈர்க்கப்பட்டது. அமனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்ட ஐரோப்பா சங்கத்துடன் தாம் கவனம் செலுத்தும் விடயங்கள் தொடர்பாக கலந்துஜரயாடுவதற்கு தொழிலாளர் அமைப்புக்களுக்கு அது சிறந்ததொரு சந்தர்ப்பமாக இருந்தது.

மேலும், ஐரோப்பிய ஆணைக்குழுவினால் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த GSP+ வரிச் சலுகை சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக 2021.09.28 ஆம் திகதி ஆணைக்குழு மற்றும் ஐரோப்பிய சங்கத்தின் பிரதிநிதிகளுக்கிடையில் மேலுமொலு கலந்துஜரயாடல் நடாத்தப்பட்டது.

5.5 ஆணைக்குழுவின் தரப்படுத்தல்

தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டமைப்பினால் (GANHRI) மூன்றாம் தரப்புக்களிளால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சம்பந்தமாக ஆற்றுப்படுத்தப்பட்ட அறிக்கையொன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு காரண விளக்கத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது. இது சம்பந்தமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணையவழி ஊடாக மீளாய்வுக் கூட்டமொன்று தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டமைப்பினால் நடாத்தப்பட்டது. தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டமைப்புச் சட்டத்தின் 18.1 பிரிவுக்கமைய, மீளாய்வுக் கூட்டத்தின் அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சம்பந்தமாக பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. அதற்கிணங்க ஒரு வருடத்தின் இறுதியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு "டீ" தரத்திற்கு தரமிறக்கப்பட்டது. இந்தப் பரிந்துரையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நிராகரிப்பதாயின் அதனை எழுத்து மூலமாக சவாலுக்குட்படுத்த முடியுமென GANHRI இனால் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இது சம்பந்தமாக எழுத்து மூல அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளது.

5.6. இலங்கைக்கான நியூசிலாந்து உயர் ஸ்தானிகருடனான கலந்துரையாடல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2021 ஒக்தோபர் 21 ஆம் திகதி இலங்கைக்கான நியூசிலாந்து உயர் ஸ்தானிகருடன் கலந்துஜரயாடலொன்றை நடாத்தியது. நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைமை சம்பந்தமாக இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது.

5.7. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின; (ICRC) பிரதிநிதிகளுடனான கலந்தரையாடல்

இலங்கைக்கு வருகை தந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் 2021.11.05 ஆம் திகதி இலங்கையில் சிறைக்கைதிகளின் உரிமைகள் சம்பந்தமாக கலந்துரையாடலொன்றை நடாத்தினர்.

அத்தியாயம் 6 :

மனித வளங்கள், நிருவாகம் மற்றும் நிதி

6.1 அறிமுகம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது தலைமை அலுவலகத்தில் போன்றே பிராந்திய அலுவலகங்களிலும் தேர்ச்சி பெற்ற ஆளணியைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்டுள்ளதுடன், ஆளணி அங்கத்தவர்களின் வினைத்திறன், சவால்களுக்கு முகங்கொடுத்தல் மற்றும் அவர்களுடைய சேவையை எதிர்பார்க்கும் மக்களுக்கு தேவையான உதவியைப் பெற்றுக்கொடுப்பதற்காக அவர்களுடைய திறமைகளை பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றலை மேம்படுத்திக்கொள்வதற்காக தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு ஊக்கமளிக்கின்றது. கொவிட் - 19 தொற்று நோயின் ஆரம்பத்தில் விதிக்கப்பட்ட சர்வதேச ரீதியிலான பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக ஆளணிக்கு 2021 இல் சர்வதேச பயிற்சிகளுக்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

6.2. மனித வளங்கள் முகாமைத்துவம்

2021 ஆம் ஆண்டிற்கான மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டமானது மனித வளங்களின் தர மேம்பாட்டினை முன்னிறுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீளாய்வாண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆளணிக்காக பயிற்சிப் பட்டறைகள், கலந்துரையாடல்கள் மற்றும் திறன் விருத்தி எனும் அடிப்படையில் சில பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களிடையே தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் மற்றும் மனிதாபிமான செயற்பாடுகளின்போது மனித உரிமைகள் விருத்தி, தேசிய மனித உரிமைகள் உரிமை நிறுவனங்களின் அலுவல்கள் அவர்களுடைய தேசிய ரீதியிலான வெற்றியில் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அவதானித்தல், பாலியல் தொடர்பான நோக்கு, பாலின சமூக நிலைமையில் மனித உரிமைகளை விருத்தி செய்தல் மற்றும் பாதுகாத்தல், மனித உரிமைகள் பாதுகாவலர்களைப் பாதுகாத்தல் என்பன உள்ளடங்கும். ஆளணிக்காக இந்தப் பயிற்சித் திட்டங்களை ஆசிய பசுபிக் ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகளின் பெண்கள் அமைப்பு (UN Women) ஏற்பாடு செய்தன. எவ்வாறாயினும் நாட்டில் நிலவிய கொவிட் - 19 தொற்று நோய் நிலைமையின் முன்னே சுகாதார அதிகாரிகளின் பரிந்தரை காரணமாக செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த சில பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்த முடியவில்லை.

2021 ஆம் அண்டாகும்போது ஆணைக்குழுவில் 87 வெற்றிடங்கள் நிலவியது. 2021 ஆம் ஆண்டில் அவற்றில் 33 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதுடன், ஆட்சேர்ப்புக்கள் நிரந்தர, ஒப்பந்த அடிப்படை மற்றும் இரண்டாம் நிலை அடிப்படையில்

மேற்கொள்ளப்பட்டன. திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் மீதி 54 வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சட்ட அலுவலர்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்களுக்கான நேர்முகத் தேர்வுகள் நடாத்தப்பட்டாலும் 2021 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புக்களை மட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் நிதிக் கொள்கைத் தீர்மானம் காரணமாக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள முடியவில்லை. எவ்வாறாயினும் தற்காலிக நடவடிக்கையாக ஆணைக்குழுவின் அலுவல்களை வினைத்திறன்மிக்க வகையில் மேற்கொள்வதற்கு ஆளணியில் பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக ஆணைக்குழுவின் சிரமங்களுக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்காக 27 பயிலுனர் பட்டதாரிகள் ஆணைக்குழுவுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கிடையில் அந்தப் பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உள்ளக ரீதியிலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய வெற்றிடமாகியுள்ள செயலாளர் பதவிக்காக பதில் கடமை அடிப்படையில் மேலதிக செயலாளரை நியமித்தல், நிருவாகம் மற்றும் நிதிப் பணிப்பாளர் பதவிக்கு அரச சேவை உத்தியோகத்தர் ஒருவரை இரண்டாம் நிலை அடிப்படையில் நியமித்தல், ஒப்பந்த அடிப்படையில் நிருவாக உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல், மற்றும் மனித உரிமைகள் உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் உள்ளீர்ப்புச் செயற்பாட்டினூடாக 14 உத்தியோகத்தர்களும், 03 பிராந்திய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டனர். வவுனியா, மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய அலுவலகங்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு யாழ்ப்பாண பிராந்திய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.

6.3. நிதிசார் வளங்கள் முகாமைத்துவம்

ஆணைக்குழுவுக்கு அடிப்படை அலுவல்களை நிறைவேற்றுவதற்காக திறைசேரியிடமிருந்து நிதி கிடைக்கப்பெற்றது. 2021 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைமை பற்றிய பொழிப்பு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2021.01.01 முதல் 2021.12.31 வரையான நிதி நிலைமை பற்றிய பொழிப்பு

ஆரம்ப மீதி	**ரூ.**
திறைசேரியினால் வழங்கப்பட்ட பணி முற்பணம்	
மீண்டெழும் செலவினம்	208,659,000.00
மூலதனச் செலவினம்	4,150,720.00
ஏனைய பெறுகைகள்	687,258.38
வைப்புக் கணக்கின் தேறிய மாற்றம்	(1,932,767.11)
திறைசேரிக்கு பணம் அனுப்புதல்	(206,995.73)
மொத்தப் பெறுகைகள்	**211,357,215.54**
செலவுகள்	
ஆளுக்கான வேதனாதிகள்	128,183,128.34
பிரயாணச் செலவுகள்	496,047.50
வழங்கல்கள்	5,739,625.21
பராமரிப்புச் செலவுகள்	3,855,318.09
சேவைகள்	62,703,083.06
மாற்றல்கள்	5,470,459.63
மனித உரிமைகள் நிகழ்ச்சித் திட்டங்கள்	1,646,726.47
மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாடு	292,270.00
மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு	1,498,720.00
ஆற்றல் விருத்தி (இயலளவு மேம்பாடு)	130,936.00
இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்காக ஊக்குவிப்பு உதவி (UNDP)	-
நாட்டிற்கு திரும்பி வருபவர்களுக்கு தமது உரிமைகளை அனுபவிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தல் (ருரேஊசு)	1,340,901.24
மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இயலளவைப் பலப்படுத்தல் (SWISS)	-
மொத்தச் செலவு	**211,357,215.54**

6.4. உள்ளக / பயிலுனர் பயிற்சித் திட்டங்கள்


ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் நேர்முகத் தேர்வுகளை நடாத்துவதனூடாக பல்வேறு நிறுவனங்களின் பயிலுனர்கள் அல்லது உள்ளகப் பயிலுனர்கள் தன்னார்வ அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அதற்கமைய, இந்தத் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு முறையே 14 பயிலுனர்கள் மற்றும் 26 உள்ளகப் பயிலுனர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும் கொவிட் - 19 மட்டுப்பாடுகள் காரணமாக உள்ளக நிகழ்ச்சித் திட்டங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன.

பின்னிணைப்புக்கள்

பின்னிணைப்பு 1 - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடு

பின்னிணைப்பு 2 – பரிந்துரைகள்

பின்னிணைப்பு 1 - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடு



பின்னிணைப்பு 2 – பரிந்துரைகள்

2021 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை			88			
நடைமுறைப்படுத்தப்பட்ட எண்ணிக்கை			09			
	வழக்கு இல.	**மனுதாரர் (முறைப்பாட்டாளர்)**	**வழங்கப்பட்ட திகதி**	**மீறப்பட்டுள்ள அரசியலமைப்பு உறுப்புரை**	**பிரதிவாதி**	**முறைப்பாட்டின் வகை**
1	HRC/1631/15	கே.யூ.பு்பகுமார	2021/1/6	12(1) உறுப்புரை	பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு	சேவை நிபந்தனை
2	HRC/1144/15	கே. சிவனந்தசெல்வம்,	2021/2/1	12(1) உறுப்புரை	கல்வி அமைச்சு	பதவி உயர்வு
3	HRC/Ap/147/18	எஸ்.குமார	2021/1/13	12(1) உறுப்புரை	இலங்கை இராணுவப் படை	ஓய்வூதியம்
4	HRC/AP/376/15	வை.எஸ்.செனரத்	2021/2/1	12(1) உறுப்புரை	மாவட்ட செயலாளர், அனுராதபுரம்	ஓய்வூதியம்
5	HRC/2213/16	பீ.வீ.பீ.தர்'னீ	2021/1/13	12(1) உறுப்புரை	தென்னை அபி.அதிகார சபை	பதவி உயர்வு
6	HRC/K/657/18	பீ.ஆர்.லொக்குகலப்பத்தி,	2021/1/2	12(1) உறுப்புரை	கிங்ஸ்வூட் கல்லூரி, கண்டி	பாடசாலை அனுமதி
7	HRC/3620/17	பி.ஸ்ரீயாவதீ	2021/2/1	12(1) உறுப்புரை	சங்கமித்தா மகளிர் கல்லூரி	பாடசாலை அனுமதி
8	HRC/AP/476/15	ரீ.டீ.அமுகொட	2021/2/1	12(1) உறுப்புரை	பிர.செயலாளர், ரம்பேவ	காணிப் பிரச்சினை
9	HRC/845/17	வை.ஏ.கருணாரத்ன	2021/1/2	12(1) உறுப்புரை	தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	பதவியுயர்வு
10	HRC/MT/355/17	ஏ. குணவர்தன	2021/2/18	13(2) உறுப்புரை	வெலிகம பொலீஸ்	கைது / தடுத்து வைப்பு
11	HRC/284/15	டப்ளியூ.எஸ்.பண்டார,	2021/2/18	11, 13(2) உறுப்புரை	எம்பிலிபிட்டிய பொலீஸ்	சித்திரவதை

12	HRC/AP/561/14	டீ.எம்.என்.தசநாயக்க	2021/2/18	13(1) உறுப்புரை	ராஜாங்கனை பொலீஸ்	கைது / தடுத்து வைப்பு
13	HRC/1751/18	டீ.எம்.திரிமாவித்தான	2021/2/18	11 உறுப்புரை	பிலியந்தளை பொலீஸ்	சித்திரவதை
14	HRC/Ap/120/18	ஜீ.ஏ.ரீ.எம். டி	2021/2/18	12(1), 13(1) உறுப்புரை	மாத்தளை பொலீஸ்	கைது / தடுத்து வைப்பு
15	HRC/3757/13	கே.ஏ.நிமல்	2021/2/18	11 உறுப்புரை	கிருலப்பனை பொலீஸ்	சித்திரவதை
16	HRC/2901/19	புனித இதய மடாலயம் (ளுயஉசநன ர்நயசவ ஊழஎநவெ) முஸ்லிம் பிள்ளைகளின் பெற்றோர்சங்கம்,	2021/2/18	10,12(1) 12(2), 14(1) உறுப்புரை	தென் மாகாண கல்வி அமைச்சு	துன்புறுத்தல் (அபாயா) முஸ்லிம் பெண்களின் ஆடை
17	HRC/2785/17	டீ.எச்.பீ.கெள'ல்ய	2021/2/18	12(1) உறுப்புரை	மீட்டியாகொட பொலீஸ்	கைது / தடுத்து வைப்பு
18	HRC/KL/136	எம்.பி.எம்.சிராஜ்	2021/2/18	12(1),12(2) உறுப்புரை	தொழில்நுட்ப மற்றும் பயிற்சித் திணைக்களம்	கைது / தடுத்து வைப்பு
19	HRC/4625/12	டப்ளியூ.எஸ்.என். எல். குமார	2021/02/23	12(1) உறுப்புரை	இலங்கை கடற்படை	சேவை நிபந்தனை
20	HRC/2499/19	வீ.சுப்பரமணியம்		12(1) உறுப்புரை		
21	HRC/AM/03/18/ S/EM	எச்.எம்.பீ.என்.ஹேரத்	2021/3/3	12(1) உறுப்புரை	தபால் திணைக்களம்	ஆட்சேர்ப்பு
22	HRC/1531/15	கே.டீ.சுனீதா, 25/13பு, ஜேர்மன்வத்த, பெப்பிலியாவல	2021/3.'.9	12(1) உறுப்புரை	வீடமைப்பு, நிர்மாணங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு	நட்டஈடு
23	HRC/AP/446/17	ஏ.எம்.பண்டம்மா	2021/3/9	12(1) உறுப்புரை	புகையிரதத் திணைக்களம்	ஓய்வூதியம்
24	HRC/KL/84/17	எஸ்.எம்.இ'ாக் மற்றும் ஏனையோர்	15/3/2021	11,13(1) 13(2) உறுப்புரை	சாவகல்லடி பொலீஸ்	கைது / தடுத்து வைப்பு
25	HRC/2011/12	டப்ளியு.பீ.நிலந்த	2021/3/9	12(1) உறுப்புரை	இலங்கை இராணுவப்	பணி நிறுத்தம்

					படை	
26	HRC/3852/14	எம்.ஜயரத்ன	2021/3/9	12(1) உறுப்புரை	மேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்	சேவை நிபந்தனை
27	HRC/1004/14	கே.ஜீ.பீ.பெர்னாந்து	2021/03/09	12(1) உறுப்புரை	இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்	காப்புறுதி
28	HRC/K/171/13	டப்ளியு,டீ.எம்.ஜீ.ஏ.விஜேசுந்தர	2021/03/18	12(1) உறுப்புரை	திஹகொட பொலீஸ்	சித்திரவதை
29	HRC/AP/68/18	சீ.யூ.கப்பாகொட		12(1) உறுப்புரை		
	HRC/AP/237/18	சீ.ஜே.விஜேசுந்தர	2021/03/29	12(1) உறுப்புரை	அனுராதபுரம் மாநகர சபை	பாடசாலை அனுமதி – தரம் 6
30	HRC/110/20	பி.எச்.எஸ்குமார	29/3/2021	12(1) உறுப்புரை	ரிச்மன்ட் கல்லூரி	பாடசாலை அனுமதி
31	HRC/3220/16	யூ.டீ.சத்துரங்க	2021/03/29	12(1) உறுப்புரை	டீ.எஸ்.சேனா நாயக்க கல்லூரி	பாடசாலை அனுமதி
32	HRC/K/166/15	பி.டப்ளியூ.டீ.ஆர்.தர்மகீர்த்தி	29.3.2021	12(1) உறுப்புரை	மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்	ஆட்சேர்ப்பு
33	HRC/K/87/20	ஜே.ஆர்.ரீ.சமரதுங்க	2021/03/29	12(1) உறுப்புரை	கேகாலை கல்லூரி	பாடசாலை அனுமதி
34	HRC/1321/15	கே.கே.டப்ளியு.எல். விமலசிரி	29/3/2021	12(1) உறுப்புரை	அம்பலாங்கொடை பொலீஸ்	சித்திரவதை
35	HRC/AP/515/17 (S)	ரீ.எம்.என்.சீ.பியரத்ன	2021/4/9	12(1) உறுப்புரை	கிரிபாவ பொலீஸ்	கைது / தடுத்து வைப்பு
36	HRC/417/19	எச்.ரீ.தரங்க	2021/4/9	12(1) உறுப்புரை	வி'ாக்கா கல்லூரி	பாடசாலை அனுமதி
37	HRC/5069/16	எம்.எஸ்அபேதீர	2021/4/9	12(1) உறுப்புரை	பிர. செயலாளர், ருவன்வெல்ல	காணி, சொத்துரிமை
38	HRC/JA/3398/07	ஆர்.கருணாநிதி	2021/4/19	12(1) உறுப்புரை	பதிவாளர் நாயகம் திணைக்களம்	பதவியுயர்வு
39	HRC/76/18	டீ.என்.எஸ் டி சில்வா	2021/4/9	12(1) உறுப்புரை	சிரேட்ட பிரதி பொலீஸ் மா அதிபர், தென் மாகாணம்	பாலியல் வன்கொடுமை
40	HRC/415/18	எம்.எம்.சீ.பெரேரா	2021/5/18	12(1)	கிருலப்பனை	சித்திரவதை

				உறுப்புரை	பொலீஸ்	
41	HRC/1565/18	எல்.எம்.ஏ.எம்.லங்காதீர	2021/5/19	11,12(1) உறுப்புரை	பொலீஸ் அத்தியட்சகர், பதுளை	பாலியல் வன்கொடுமை
42	HRC/KL/55/15	பாதிக்கப்பட்ட ஊழியர் குழுவொன்று, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, அக்கரைப்பற்று.	2021/5/10	12(1),12(2) உறுப்புரை	நீர் வழங்கல் சபை	ஆட்சேர்ப்பு
43	HRC/94/19	இசட்.சீ.எம்.பஸ்லி	2021/5/10	12(1) உறுப்புரை	ரோயல் கல்லூரி	பாடசாலை அனுமதி
44	HRC/2953/17	ஏ.பிரேமலதா	2021/5/10	11 உறுப்புரை	எகலியகொட பொலீஸ்	சித்திரவதை
45	HRC/AM/60/11	கே.எம்.எஸ்.ரஞ்சித்	2021/05/18	12(1) உறுப்புரை	மாவட்ட வனப் பகுதி அதிகாரி, அனுராதபுரம்	அனுமதிப் பத்திரம்
46	HRC/53/17	பீ.விஜேசூரிய	2021/05/18	11,1(1) உறுப்புரை	ஹோமாகம பொலீஸ்	சித்திரவதை
47	HRC/359/14	எஸ்.ஏ.டீ.காஞ்சன	2021/05/18	11 உறுப்புரை	இலங்கை இராணுவப் படை	சித்திரவதை
48	HRC/3267/17	டப்ளியு.எம்.பீ.சீ.வர்ணசூரிய உள்ளிட்ட ஏனையோர்		12(1) உறுப்புரை	தொழில் திணைக்களம்	ஆட்சேர்ப்பு
49	HRC/K/462/19	எல்.பீ.டீ.என்.ரீ.டயஸ்	2021/5/18	12(1) உறுப்புரை	தள வைத்தியசாலை, கரனவெல்ல	சேவை நிபந்தனை
50	HRC/AM/22/20	ஆர்.ஏ.ஜயவீர	2021/05/18	11 உறுப்புரை	மக ஓயா பொலீஸ்	சித்திரவதை
51	HRC/97/19	எம்.ஆர்.எல்.ஜினதாச	2021/5/18	12(1) உறுப்புரை	சிறிமாவோ பண்டாரநாயக்க கல்லூரி	பாடசாலை அனுமதி
52	HRC/821/17	ஏ.என்.விஜேசேக்கர	2021/7/19	11,13(4) உறுப்புரை	பேலியகொட பொலீஸ்	கைதின் போது மரணம்
	HRC/767/17	259/1/2/டீஇ				
53	HRC/4437/15	ஏ, எல்.விக்ரம	2021/7/19	11 உறுப்புரை	கிருலப்பனை பொலீஸ்	சித்திரவதை
54	HRC/922/18	எச்.எம்.பிரேமரத்ன	2021/7/19	13(1)	எகலியகொட	கைது /

				உறுப்புரை	பொலீஸ்	தடுத்து வைப்பு
55	HRC/1120/19	ஏ.எச்.எப்.ஹனிபா	2021/7/19	12(1),12(2), 13(2) உறுப்புரை	பண்டாரகம பொலீஸ்	துன்புறுத்தல்
56	HRC/1040/15	ஐ.பீ.டப்ளியூ.ஆர். ஜயவீர	2021/7/19	11,13(1) உறுப்புரை	கிரிந்திவலை பொலீஸ்	சித்திரவதை
57	HRC/1697/18	டப்ளியு.எம்.பீ.விஜ யசுந்தர	2021/7/19	11,13(1) உறுப்புரை	இரக்வானை பொலீஸ்	சித்திரவதை
58	HRC/3346/16	பி.எச்.ஏ.எச்.ஜீ.மத் துரட்ட	2021/7/19	12(1), 14(1)(ப)	நிதியமைச்சு, பொலீஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சு	அனுமதிப் பத்திரம்
59	HRC/4408/15	எஸ்டீ.எம்.பிரியந்த	2021/7/19	12(1) உறுப்புரை	பயாகல பொலீஸ்	சித்திரவதை
60	HRC/618/21	பீ.ஏ.எம்.விஜேசேக் கர	2021/7/22	12(1) உறுப்புரை	இலங்கை விமானப் படை	சேவை நிபந்தனை
61	HRC/JA/26/21	என்.பீ.மனோகரதா ஸ்	2021/9/13	12 உறுப்புரை	யாழ்ப்பாண மாநகர சபை	செயற்படாமை
62	HRC/537/15	டப்ளியூ.ஏ.பீ.வன்ன ிஆரச்சி	2021/9/16	12(1),12(2), 14(1), யஇப. உறுப்புரை	தனமல்வில பொலீஸ்	சித்திரவதை
63	HRC/AP/278/14	ஆர்.எம்.எஸ். சாந்தனி	2021/9/16	13(1) உறுப்புரை	கலென்பின்துனு வெவ பொலீஸ்	கைது / தடுத்து வைப்பு
64	HRC/1459/17	டீ.பீ. திஸ்ஸ	2021/9/27	11 உறுப்புரை	சமனலவெவ பொலீஸ்	சித்திரவதை
65	HRC/AP/339/15	ஏ.எம்.எல்.அங்கம் மன	2021/10/25	13(1) உறுப்புரை	அனுராதபுரம் பொலீஸ்	கைது / தடுத்து வைப்பு
66	HRC/1642/18	எஸ்.ஜீ.சோமாவதீ	2021/10/25	12(1) உறுப்புரை	விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை	ஓய்வூதியம்
67	HRC/2557/16	டப்ளியூ.எச்.மால னீ	2021/10/26	22 உறுப்புரை	வாத்துவை பொலீஸ்	கைது / தடுத்து வைப்பு
68	HRC/1930/15	டப்ளியூ.எம்.அபேே கான் ,	2021/10/26	11,13(1), 13(2) உறுப்புரை	குருவிட்ட பொலீஸ்	சித்திரவதை
69	HRC/4538/16	ஏ.குரூஸ்	2021/10/26	13(1) உறுப்புரை	குற்றப்புலனாய் வுத் திணைக்களம்	கைது / தடுத்து வைப்பு

70	HRC/1958/16	ஜே.பீ.ஹின்டலே	2021/10/26	12(1), 13 (2) உறுப்புரை	மாவத்தகமபொலீஸ்	கைது / தடுத்து வைப்பு
71	HRC/3447/16	டப்ளியு.ஐ.மிகிரானி, மருதானை, அஹுங்கல்லை	2021/10/26	11,13(1) 13(2) உறுப்புரை	அம்பலாங்கொடை பொலீஸ்	சித்திரவதை
72	HRC/2112/17	ஜே.எல்.பத்தமசிரி	2021/11/8	11,13(1) 13(2) உறுப்புரை	வெலிவேரிய பொலீஸ்	சித்திரவதை
73	HRC/715/15	என்.ஜீ.எஸ்.எம்.ரத்னாயக்க	2021/12/11	12(1) உறுப்புரை	மொரட்டுமுல்ல பொலீஸ்	கைது / தடுத்து வைப்பு
74	HRC/3084/18	ஐ.கே.எஸ்.கருணாநாயக்க உள்ளிட்ட ஏனையோர்	2021/12/11	12(1) உறுப்புரை	ரோயல் கல்லூரி	பாடசாலை அனுமதி
75	HRC/AP/665/13	ஆர்என்.ரீ.ஏ.ரத்னாயக்க	2021/12/11	12(1) உறுப்புரை	ரஜரட்ட பல்கலைக்கழகம்	ஆட்சேர்ப்பு
76	HRC/578/15	வை.ஏ.சீ.டீ.ஆர்.வீரசூரிய	2021/12/11	13(1) உறுப்புரை	பலாங்கொடை பொலீஸ்	கைது / தடுத்து வைப்பு
77	HRC/195/18	ஆர்,ஏ.பிரியந்த	2021/12/11	12(1) உறுப்புரை	பர்கசன் தேசிய பாடசாலை	பாடசாலை அனுமதி
78	HRC/K/379/15	டப்ளியு.ஜீ.என்.மாரசிங்க	2021/12/11	13(1) உறுப்புரை	புதிய கறுவாத் தோட்டப் பொலீஸ்	கைது / தடுத்து வைப்பு
79	HRC/2600/16	எம்.டீ.எஸ்.அமரசிரி	8/11/2021	11 உறுப்புரை	பொலன்னறுவை பொலீஸ்	சித்திரவதை
80	HRC/AM/70/16	எச்.டீ.பிரேமரத்ன	2021/12/11	12(1) உறுப்புரை	வலயக் கல்விப் பணிப்பாளர், அம்பாறை	இடமாற்றல்
81	HRC/112/20	எஸ்.ஏ.சீ.எஸ்.குணரத்ன	29/11/2021	12(1) உறுப்புரை	ஆனந்தாக் கல்லூரி	பாடசாலை அனுமதி
82	HRC/2953/16	டீ.ஏ.ஏ.ராஜகருணா	29/11/2021	13/(5), 12(1) உறுப்புரை	இலங்கை கடற்படை	முறையற்ற அதிகாரப் பிரயோகம்
83	HRC/2927/17	எச்.எம்.ஜீ.என்.கே.களுஹெந்திவெல	29/11/2021	13/(5), 12(1) உறுப்புரை	கமநல அபிவிருத்தி திணைக்களம்	முறையற்ற அதிகாரப் பிரயோகம்
84	HRC/3794/19	பீ.ஜீ.ஆர்.சீ.ஏ.கம்லத்	29/11/2021	12(1) உறுப்புரை	பொலீஸ் மா அதிபர்	செயற்படாமை

86	HRC/2793/15	ஆர்.பி.தீபானி	29/11/2021	11 உறுப்புரை	பிர.செயலாளர், ஹெரணை	சித்திரவதை
86	HRC/AP/412/14	எல்.பி.ராஜகருணா	29/11/2021	12(1) உறுப்புரை	ஓய்வூதியத் திணைக்களம்	ஓய்வூதியம்
87	HRC/K/655/16	எச்.எம்.எம்.ஜீ.எச். விமலவீர	17/11/2021	11 உறுப்புரை	புலத்கொஹு பிட்டிய பொலீஸ்	சித்திரவதை
88	HRC/K/492/20	எச்.பீ.குணவர்தன	20/12/2021	12(1) உறுப்புரை	முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்	பதவியுயர்வு

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. : PIC/B/HRC/2/21/28 2022 மே மாதம் 30 ஆம் திகதி

செயலாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் மும்மொழிகளிலும் மூலப் பிரதிகளுடன் இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

எம்.சோமதிலக்க
பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

பிரதி : பணிப்பாளர் நாயகம் - அரச கணக்குகள் திணைக்களம்

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. : PIC/B/HRC/2/21/28
2022 மே மாதம் 30 ஆம் திகதி

செயலாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 கருத்துரை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது கட்டளைப் பிரகாரம் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கருத்துரைகளைத் தெரிவித்தல் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிதி நிலைமைக் கூற்றுக்களினூடாக 2021 திசெம்பர் 31 ஆம் திகதியன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு

நியமங்களுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 கருத்துரைக்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய (இ.க.நி) என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையை வழங்குவதன் நிமித்தம் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானவை மற்றும் பொருத்தமென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கமைய மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தும் வகையில் நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆவது பிரிவின் பிரகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் குறித்த காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முடியுமான பிரகாரம் தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணிவரல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவிற்கமைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிதி நிர்வாகத்திற்காக விளைதிறன்மிக்க உள்ளக நிர்வாக முறைமையை தயாரித்துப் பேணிவருவதனை தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டுமென்பதுடன் அந்த முறைமையின் விளைதிறன் சம்பந்தமாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்றை மேற்கொண்டு அதற்கமைய முறைமையை விளைதிறன்மிக்க வகையில் நடாத்துவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்படுத்தலாக இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன், அதன் அளவுத்திறனானது இந்த நிதிக் கூற்றை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீதான அழுத்தத்தின் மீது தங்கியுள்ளது.

என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வுக் கருத்துரைக்கான அடிப்படையைப் பெற்றுக்கொள்ளும்போது ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் பொய்க் கூற்றுக்களின் ஆபத்தை இனங்கண்டுகொள்ளல் மற்றும் மதிப்பீட்டை மேற்கொள்ளும்போது சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. தவறுதலாக குறிப்பிடப்படுதல் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன், கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல், தவறாகக் குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.
- உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லையாயினும், சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக நிர்வாகம் சம்பந்தமான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருத்தலை மதிப்பீடு செய்தல்.
- நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான

மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரை அறிவுறுத்துகின்றேன்.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (ஈ) ஆவது பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைந்திருக்கின்றது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் தொடர்பாக என்னால் முன்வைக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பந்தி	கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை
1.6.2.1 (அ)	ஆணைக்குழுவுக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களும் நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2004 ஜனவரி 01 ஆம் திகதியின் பின்னர் ஆணைக்குழுவினால் கையகப்படுத்திக்கொள்ளப்பட்ட சொத்துக்கள் மாத்திரம் நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிலவிய சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	வேறுபாடுகளை இனங்கண்டு சரியான முறையில் கணக்கில் பதிதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

கீழ் குறிப்பிடப்படும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை
(அ) 2016 மார்ச் மாதம் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை (ஈ) 3.2 ஆம் பந்தி	அனைத்து நிதியாண்டுகளிலும் யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கடந்த ஆண்டின் இருப்புப் பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பிரதியிடப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவினால் 2020 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் ஒரு பகுதியை சுமார் 06 மாத கால தாமதத்துடன் 2021 திசெம்பர் மாதம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் அம்பாறை, பதுளை, கல்முனை, கண்டி ஆகிய பிராந்திய அலுவலகங்களின் மற்றும் நுவரெலியா,கிள்நொச்சி, மன்னார், பொலன்னறுவை ஆகிய உப அலுவலகங்களின் இருப்புப் பொருட்கள் கணக்கெடுப்பு பற்றிய அறிக்கை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) 3.2.5 ஆம் பந்தி	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் அனைத்து நிதியாண்டிலும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் பொது 47 அறிக்கைக்கமைய புறத்தொதுக்க வேண்டிய, பழுதுபார்ப்பு செய்ய வேண்டிய, விற்பனை செய்ய வேண்டிய மற்றும் வேறு நிறுவனங்களுக்கு உரிமை மாற்றம் செய்ய முடியுமான பொருட்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாமல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ)

1993.09.21 ஆம் திகதிய 22/93 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை	கடமையில் ஈடுபட்டிருக்கும்போது 2014 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளான ஆணைக்குழுவின் பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு சுற்றறிக்கைப் பிரகாரம் செலுத்தப்பட்ட ரூ. 308,700 இழப்பீட்டுத் தொகைக்கு மேலதிகமாக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் 2016 ஏப்ரல் மாதத்திலிருந்து 2019 மார்ச் மாதம் வரை மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவாக மொத்தம் ரூ. 650,016 செலுத்தப்பட்டிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் கல்வி அமைச்சுடன் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த 90 பரிந்துரைகளில் கணக்காய்வுத் திகதியான 2022 பெப்ருவரி 14 ஆம் திகதி வரை 57 பரிந்துரைகள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தன. அதாவது 63% ஆகும்.

(ஆ) ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் ஓய்வூதியத் திணைக்களத்துடன் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த 07 பரிந்துரைகளில் கணக்காய்வுத் திகதியான 2022 பெப்ருவரி 14 ஆம் திகதி வரை 02 பரிந்துரைகள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தன. அதாவது 29% ஆகும்.

(இ) ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் இலங்கை பொலீஸுடன் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த 50 பரிந்துரைகளில் கணக்காய்வுத் திகதியான 2022 பெப்ருவரி 14 ஆம் திகதி வரை 05 பரிந்துரைகள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தன. அதாவது 10% ஆகும்.

(ஈ) மாத்தறை பிராந்திய அலுவலகத்தினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பொலீஸ் நிலையங்கள், தடுப்பு முகாம்கள் மற்றும் சிறைச்சாலைகளை அவதானித்து புலனாய்வு உத்தியோகத்தர் அது தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட வேண்டிய முக்கியமான விடயமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள இடங்களை அவதானிப்பின்போது கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் அது தொடர்பான தனது முடிவுகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த அறிக்கையை எவரிடம் ஆற்றுப்படுத்துவது என்பது பற்றி குறிப்பிடப்படாதிருந்ததுடன் அந்த அறிக்கை பிறிதொரு உத்தியோகத்தரால் பின்னூட்டப்படுதல் சம்பந்தமான சாட்சிகள் இருக்கவில்லை.

(உ) கல்வி மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் அவற்றினூடாக பொது மக்களின் அறிவு விருத்தி அடையாமையின் காரணமாக மாத்தறை பிரதேச செயலகத்திற்கு கடந்த 05 வருட காலத்தினுள் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் பரிந்துரைகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் நிவாரணங்களை வழங்காமல் 67% - 95% இற்கிடைப்பட்ட முறைப்பாடுகள் பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு நீக்கப்பட்டிருந்ததுடன் 40% இற்கும் அதிகமான முறைப்பாடுகள் மனித உரிமைகள் மீறப்பட்டிருக்காமை அல்லது விடயப் பரப்புக்குள் உள்ளடக்கப்படாமை காரணமாக நீக்கப்பட்டிருந்தன.

(ஊ) மாத்தறை பிராந்திய அலுவலகத்தினால் முறைப்பாடுகளை விசாரிக்கும்போது 02 தொடக்கம் 08 வருட காலப் பகுதியினுள் பாரிய கால தாமதம் ஏற்பட்டதுடன், ஆண்டினுள் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக அந்த ஆண்டினுள் 1% இலும் குறைந்தளவுக்கு மாத்திரமே பரிந்துரைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தன.

3.2 <u>பெறுகைகள்</u>

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட மகளிர் தின வைபவ நிகழ்ச்சியின் புகைப்படங்கள் மற்றும் வீடியோப் பதிவுகளுக்காக அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டியைப் பின்பற்றாது எந்தவொரு விலை மனுக் கோரலையும் மேற்கொள்ளாமல் தனியார் நிறுவனமொன்றிலிருந்து

கொள்வனவு செய்யப்பட்டு அதற்காக ரூபா 30,000/= செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் நடாத்தப்பட்ட மகளிர் தின வைபவ நிகழ்ச்சியை நடாத்துவதற்காக பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சிக்கான உணவு பானங்கள் கொள்வனவுக்கான விலை மனுக்கள் கோரப்படாதிருந்ததுடன் மண்டப வசதிகளுக்காக மாத்திரம் விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தன. அந்த நினைவு தின வைபவத்தில் பங்குபற்றிய 75 நபர்களுக்காக எந்த விதமான பெறுகைச் செயற்பாட்டையும் மேற்கொள்ளாமல் ரூ. 225,000/= செலவில் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உணவுக்கான செலவைப் பார்க்கிலும் மேலும் ரூ. 82,950.ஃ எந்த விதமான முன் அனுமதியும் பெற்றுக்கொள்ளப்படாமல் அந்த நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ரூ. 600,000/= பெறுமதியான மடிக் கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகளின்போது அரசாங்க பெறுகைகள் வழிகாட்டியின் 2.6.1 (அ) (ii) ஆம் பந்தியைப் பின்பற்றாமல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவரது கையொப்பத்தினூடாக மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டியின் 6.3.6 ஆம் பந்திக்கமைய ஏலங்களை (விலை மனுக்களை) திறத்தலுடன் தொடர்பான அலுவல்களை உரிய படிவத்தில் அறிக்கைப்படுத்தல் வேண்டுமென்பதோடு, அந்த அறிக்கைக் குறிப்புக்களில் ஏலங்களை திறத்தல் குழுவின் அனைத்து அங்கத்தவர்களும் கையொப்பமிடுதல் வேண்டும். ஆயினும் மடிக் கணனிகள் கொள்வனவுடன் தொடர்பான பெறுகை நடவடிக்கையின்போது அவ்வாறு ஏலங்களை திறத்தல் தொடர்பான அறிக்கைகள் பேணி வரப்படவில்லை.

3.3 <u>முகாமைத்துவ குறைபாடுகள்</u>

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கடந்த ஆண்டிலிருந்து ஓடாமல் வளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 03 மோட்டார் சைக்கிள்களைப் பழுது பார்ப்பதற்கு அல்லது புறத்தொதுக்குவதற்கு அல்லது பிறிதொரு நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்வதற்கு அல்லது அவை தொடர்பாக வேறு

பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் உத்தியோகத்தர் ஒருவரால் சேத்திற்குள்ளான மடிக் கணனியை பழுதுபார்ப்பதற்குச் செலவான ரூ.80,000/= தொகையை குறித்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்களினால் மாதாந்த பணித் திட்டமிடலை தயாரித்து தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டுமென்பதோடு மாத இறுதியில் அந்தத் திட்டமிடப்பட்ட அலுவல்களை நிறைவேற்றுதல் சம்பந்தமான முன்னேற்ற அறிக்கையொன்றை தலைமை அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஆயினும் மாத்தறை பிராந்திய அலுவலகத்தினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) ஆணைக்குழுவினால் 2021 ஆம் ஆண்டிற்கான வாகனங்கள் தொடர்பான செலவு அறிக்கைகளைத் தயாரித்து கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்காமையின் காரணமாக ஆணைக்குழுவினால் வாகனங்கள் பயன்மிக்க வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளதா? என்பதனை கணக்காய்வின்போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

4. நல்லாளுகை

4.1 உள்ளகக் கணக்காய்வு

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு அலுவலரால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொருத்தமான கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல் வேண்டுமென்ற போதிலும் 2017 ஆம் ஆண்டு முதல் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து நிறுவனங்களுக்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று இருத்தல் வேண்டுமென்ற போதிலும் 2017 ஆம் ஆண்டு முதல் ஆணைக்குழுவில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

5. மனித வளங்கள் முகாமைத்துவம்

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளர் 2018 ஜனவரி 30 ஆம் திகதி கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் அடிப்படையில் 2019 நவம்பர் 21 ஆம் திகதி அந்த செயலாளர் பணித் தடைக்கு உட்படுத்தப்பட்டார் ஆணைக்குழுவினால் 2020 ஆம் ஆண்டில் அது தொடர்பாக முறையான விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியன்று சுமார் 02 வருடங்கள் கழிந்துள்ள போதிலும் முறையான விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2021 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் எண்ணிக்கை 235 ஆக இருந்ததுடன், உண்மையான ஆளணியின் எண்ணிக்கை 144 ஆக இருந்தது. 93 பதவி வெற்றிடங்கள் நிலவியதுடன் அதில் 21 சிரேஷ்ட மட்ட வெற்றிடங்களும், 35 இரண்டாம் நிலை மட்ட வெற்றிடங்களும் நிலவின. ஆரம்ப மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கையைத் தாண்டி இரண்டு அலுவலர்கள் மேலதிகமாக இருந்தனர். அதற்கமைய ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 40% ஆன பதவி வெற்றிடங்கள் நிலவியது.

(இ) ஆணைக்குழுவின் சிரேஷ்ட மட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் எண்ணிக்கை 46 ஆக இருந்ததுடன் உண்மையான ஆளணியின் எண்ணிக்கை 25 ஆக இருந்தது. அதில் ஒரு உத்தியோகத்தர் இரண்டாம் நிலை அடிப்படையிலும், மேலுமொரு உத்தியோகத்தர் ஒப்பந்த அடிப்படையிலும், மேலும் இரண்டு உத்தியோகத்தர்கள் கடமையை நிறைவேற்றல் அடிப்படையிலும் நியமிக்கப்பட்டிருந்தனர். அதற்கமைய ஆணைக்குழுவின் சிரே‘ட மட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 25 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலைமையில் காணப்பட்டது.

(ஒப்பம்)
எம்.சோமதிலக்க
பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. : PIC/B/HRC/2/21/28 2022 யூன் மாதம் 17 ஆம் திகதி

செயலாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (2) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கையின் வரைவொன்று இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

02. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 39(1) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இந்த அறிக்கையின் திகதி முதல் 03 மாத காலப் பகுதியினுள் முன்மொழியப்படும் தீர்வு நடவடிக்கைகள் அல்லது கவனத்திற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக எனக்கும், திறைசேரிச் செயலாளருக்கும், ஏற்புடைய அமைச்சருக்கும் அறிவித்தல் வேண்டும்.

03. சட்டத்தின் 39 (2) உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள என்னால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏதேனுமொரு நடவடிக்கை அல்வது விடயம் சம்பந்தமாக நடைமுறைப்படுத்தல் அல்லது முடியாமைக்கான காரணங்கள் இருப்பின் அது பற்றியும் எனக்கு அறியத்தருமாறு தயவாய் அறியத் தருகின்றேன்.

எம்.சோமதிலக்க
பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

பிரதி : 1. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர்.
2. செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு.

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. : PIC/B/HRC/2/21/28 2022 யூன் மாதம் 17 ஆம் திகதி

செயலாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (2) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது கட்டளைப் பிரகாரம் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (2) பிரிவிற்கமைய இந்த அறிக்கை வெளியிடப்படுவதுடன் தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 39 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை மேற்கொண்டு இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து 03 மாத காலத்திற்குள் முன்மொழியப்படும் தீர்வு நடவடிக்கைகள் அல்லது கவனத்திற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக எனக்கு அறிக்கைப்படுத்தல் வேண்டும். இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏதேனுமொரு நடவடிக்கை அல்லது விடயம் தொடர்பாக நடைமுறைப்படுத்தல் அல்லது முடியாமைக்கான காரணங்கள் இருப்பின் அது பற்றியும் எனக்கு அறியத்தரல் வேண்டும்.

1.2 **நிதிக் கூற்றுக்கள் பற்றி கருத்துத் தெரிவித்தல்**

1.2.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை	தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து
2.	**நிதி மீளாய்வு**		
2.1	ஆணைக்குழுவுக்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களையும் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவினால் 2004 ஜனவரி 01 ஆம் திகதியின் பின்னர் கையகப்படுத்தப்பட்டிருந்த சொத்துக்களை மாத்திரம் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கியிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட சொத்துக்கள் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.	சரியாகக் கணக்கில் பதிதல் வேண்டும்.	ஆணைக்குழுவின் சொத்துக்கள் கையகப்படுத்தல் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அனைத்துச் சொத்துக்களையும் மீண்டும் மதிப்பீட்டுக்குட்படுத்தி உரிய பிரகாரம் பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பொருட்களை மதிப்பீடு செய்தலுடன் தொடர்பாக பதவிநிலைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எழுமாறான கணக்காய்வு சோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கி நடவடிக்கை மேற்கொள்ளாத கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

அவதானிப்புக்கள்

3. **செயற்பாட்டு மீளாய்வு**

	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள்	பெறுமதி (ரூ.)	இணக்கமின்மை	பரிந்துரை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து
3.1					

அலுவல்களை நிறைவேற்றாமை.

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை	தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து
(அ)	2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் கல்வி அமைச்சுடன் தொடர்பாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்த 90 பரிந்துரைகளில் கணக்காய்வுத்	வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கைகள்	ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை சம்பந்தமாக மீளக் கவனத்திற் கொள்வதற்காக ஆணைக்குழுவினால் அதற்காக விசாரணைகள் மற்றும்

	தினமான 2022 பெப்ருவரி 14 ஆம் திகதி வரை 57 பரிந்துரைகள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அதாவது 63மூ ஆகும்.	மேற்கொள்ளப்படல் வேண்டும்.	புலனாய்வுப் பிரிவினால் தனியான அலகொன்று அமைக்கப்பட்டு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
(ஆ)	2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் ஓய்வூதியத் திணைக்களத்துடன் தொடர்பாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்த 07 பரிந்துரைகளில் கணக்காய்வுத் தினமான 2022 பெப்ருவரி 14 ஆம் திகதி வரை 02 பரிந்துரைகள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அதாவது 29மூ ஆகும்.	வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.	ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை சம்பந்தமாக மீளக் கவனத்திற் கொள்வதற்காக ஆணைக்குழுவினால் அதற்காக விசாரணைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவினால் தனியான அலகொன்று அமைக்கப்பட்டு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
(இ)	2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் இலங்கை பொலீஸ் தொடர்பாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்த 50 பரிந்துரைகளில் கணக்காய்வுத் தினமான 2022 பெப்ருவரி 14 ஆம் திகதி வரை 05 பரிந்துரைகள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அதாவது 10மூ ஆகும்.	வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.	ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை சம்பந்தமாக மீளக் கவனத்திற் கொள்வதற்காக ஆணைக்குழுவினால் அதற்காக விசாரணைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவினால் தனியான அலகொன்று அமைக்கப்பட்டு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
(ஈ)	மாத்தறை பிராந்திய அலுவலகத்தினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பொலீஸ் நிலையங்கள், தடுப்பு நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகளை கண்காணித்து புலனாய்வு அதிகாரி அது சம்பந்தமாக	பொலீஸ் நிலையங்கள், தடுப்பு நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகளை கண்காணித்து புலனாய்வு அதிகாரி அது சம்பந்தமாக தயாரிக்கும் அறிக்கையில் அந்த இடங்கள் சம்பந்தமான கண்காணிப்பின்போது	இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப் படாமை சம்பந்தமாக மீண்டும் கவனத்திற் கொள்வதற்காக ஆணைக்குழுவினால் அதற்காக விசாரணைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவினால்

	தயாரிக்கும் அறிக்கைகளில் குறிப்பிடப்பட வேண்டிய முக்கியமான விடயங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த இடங்கள் சம்பந்தமான கண்காணிப்பின்போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள், அது பற்றிய தனது முடிவுகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பது பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த அறிக்கையை யாரிடம் அனுப்ப வேண்டும் என்ற விடயம் குறிப்பிடப்படாதிருந்ததுடன், அந்த அறிக்கை சம்பந்தமாக பிறிதொரு அலுவலர் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கான சாட்சியங்கள் இருக்கவில்லை.	வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள், அது பற்றிய தனது முடிவுகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பது பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.	தனியான அலகொன்று அமைக்கப்பட்டு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
(உ)	கல்விசார் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும் அதன் மூலம் பொது மக்கள் விழிப்புணர்வில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்காமையினால் மாத்தறை பிராந்திய அலுவலகத்திற்கு கடந்த 05 வருடங்களாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக பரிந்துரைகள் மற்றும் நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்காமல் 67மூ - 95மூ இற்கிடைப்பட்ட முறைப்பாடுகள் பல்வேறு காரணங்களினால் வாபஸ் பெறப்பட்டிருந்ததுடன், 40மூ இற்கும் அதிகமான முறைப்பாடுகள் மனித உரிமைகள் மீறப்படாமை அல்லது விடயப் பரப்புடன் இயைந்திருக்காமையின் அடிப்படையில் நீக்கப்பட்டிருந்தன.	பொது மக்களின் விழிப்புணர்வில் அதிகரிப்பு ஏற்படும் வகையில் கல்வி மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.	மாத்தறை பிராந்திய அலுவலகத்தினூடாக தென் மாகாணத்தின் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களும் உள்ளடக்கப்பட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மாத்தறை பிராந்திய அலுவலகத்தினால் கடந்த 05 வருடங்களில் சுமார் 108 கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதனூடாக பிரதேச மக்களுக்கு மனித உரிமைகள் சம்பந்தமான விழிப்புணர்வூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாத்தறை பிராந்திய அலுவலகத்தினால் பெரியதொரு பிரதேசம் உள்ளடக்கப்படுவதுடன் அப்பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையான மக்கள் வாழ்கின்றனர்.

(ஊ)	மாத்தறை பிராந்திய அலுவலகத்தினால் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும்போது 02 - 08 வருடங்களுக்கிடைப்பட்ட அதிக கால இடைவெளி காணப்பட்டதுடன், குறித்த ஆண்டினுள் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அதே ஆண்டில் 01மூ இலும் குறைவான அளவு முறைப்பாடுகளுக்கே பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தன.	முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தல் வேண்டும்.	பிராந்திய அலுவலகங்களின் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் மற்றும் பரிந்துரைகளைப் பெற்றுக்கொடுப்பதற்குத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

3.2 **<u>பெறுகைகள்</u>**

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பரிந்துரை**	**தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து**
(அ)	மீளாய்வாண்டில் நடைபெற்ற மகளிர் தின நினைவுகூரல் வைபவத்தின் புகைப்படங்கள் மற்றும் வீடியோ எடுத்தலை அரசாங்க பெறுகை வழிகாட்டியைப் பின்பற்றாமல் எந்த விதமான விலை மனுக்கோரல்களுமின்றி தனியார் நிறுவனமொன்றினூடாக மேற்கொண்டு ரூ. 30,000 செலுத்தப்பட்டிருந்தது.	பெறுகை வழிகாட்டி பின்பற்றப்படல் வேண்டும்.	2021 ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தை நினைவுகூருமுகமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கு நிகழ்வுகளைப் புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ எடுப்பதற்கு இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட வைபவங்களின்போது எப்போதும் இந்தப் பணியை மேற்கொள்ளும் நிறுவனமொன்றிடமிருந்து வாய் மூலமாக விலை அளவுகளை வினவி அந்த விலை அளவுகள் தொடர்பாக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படாத வகையில் மற்றும் உச்சளவு சேவையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது.

			எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளைத் தவிர்த்து பெறுகை வழிகாட்டியைப் பின்பற்றி கடமைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.
(ஆ)	ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற மகளிர் தின வைபவத்தை நடாத்துவதற்காக பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வைபவத்திற்கான உணவு பானங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலை மனுக்கள் கோரப்படாதிருந்ததுடன் மண்டப வசதிகளுக்காக மாத்திரம் விலைமனுக் கோரப்பட்டிருந்தது. அந்த வைபவத்தில் கலந்துகொண்ட 75 பேருக்காக எந்த விதமான பெறுகை நடைமுறையையும் பின்பற்றப்படாமல் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து ரூ. 225,000 பெறுமதிமிக்க உணவுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உணவு செலவுக்கு மேலதிகமாக எந்தவிதமான முன் அங்கீகாரமுமின்றி அந்த நிறுவனத்திற்கு மேலும் ரூ. 82,950 செலுத்தப்பட்டிருந்தது.	விலை மனுக்களைக் கோரும்போது மண்டப வசதிகளுக்காக மாத்திரமின்றி உணவுகள் சகிதம் விலைமனுக்களைக் கோர வேண்டும்.	2021 மகளிர் தின வைபவத்திற்காக 04 நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபம் தெரிவு செய்யப்பட்டதுடன், அந்த நிறுவனத்தினாலேயே உணவும் வழங்கப்பட்டது. பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தினால் எந்தவொரு வெளி நிறுவனத்திடமிருந்தோ வெளி நபரிடமிருந்தோ உணவுகளைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. எனவே உணவுகளைக் கொள்வனவு செய்வதற்கான விலை மனுக்களைக் கோருவதற்கான வாய்ப்பு இல்லாமையின் காரணமாக குறித்த நிறுவனத்திடமிருந்தே உணவுகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(இ)	மீளாய்வாண்டில் ரூ. 600,000 பெறுமதிமிக்க மடிக் கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கையின்போது அதற்கான தொழில்நுட்ப விவரப் பட்டியல் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6.1 (அ) (ஸை) பந்தியைப் பின்பற்றாமல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவரின் கையொப்பத்தினால் மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.	பெறுகை வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.	தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு விவரப் பட்டியல் மற்றும் விலை அளவுகள் வழங்கப்பட்டு அங்கீகாரம் கோரப்பட்டது. இந்தக் காலப் பகுதியில் கொவிட் - 19 தொற்று நோய் பாரியளவில் காணப்பட்ட காலப் பகுதியாக இருந்தமையினால் தலைவர் ஏனைய அங்கத்தவர்களுட்ன தொலைபேசியில் உரையாடி வாய் மூலமான இணக்கப்பாட்டின் அடிப்படையில் தலைவரால் தயாரிக்கப்பட்ட அறிக்கைக்கு குறித்த அங்கத்தவர்களால் வழங்கப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு தலைவர் மாத்திரம் கையொப்பத்தை இட்டு சமர்ப்பித்தமையை ஏற்றுக்கொண்டுள்ளார். ஆயினும் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படுவதனைக் குறைத்து கடமையை நிறைவேற்றும்போது தேவையான சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து அலுவலர்களும் அறிவுறுத்தப்பட்டனர்.

(ஈ)	அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.6 பந்தியின் பிரகாரம் விலை மனுக்களைத் திறத்தல் சம்பந்தமான அலுவல்கள் உரிய படிவத்தில் குறிப்பிடப்பட்டு அறிக்கைப்படுத்தப்படல் வேண்டுமென்பதோடு அந்த அறிக்கையில் விலை மனுக்களைத் திறத்தல் குழுவின் அனைத்து அங்கத்தவர்களும் கையொப்பத்தை இடுதல் வேண்டும். ஆயினும் மடிக் கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கையின்போது அவ்வாறு விலை மனுக்களைத் திறத்தல் தொடர்பான அறிக்கை பேணிவரப்பட்டிருக்கவில்லை.	பெறுகை வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.	அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.6 பந்தியின் பிரகாரம் விலை மனுக்களைத் திறத்தலின்போது அனைத்து அங்கத்தவர்களும் கையொப்பமிட வேண்டியிருந்தாலும் கொவிட் 19 நிலைமையின்போது இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ள முடியவில்லை. தற்போது விலை மனுக்களைத் திறத்தலின்போது குறைபாடுகளைத் தவிர்த்து இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3.3 முகாமைத்துவ குறைபாடுகள்

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பரிந்துரை**	**தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து**
(அ)	கடந்த ஆண்டு முதல் ஓடாமல் வளவில் வைக்கப்பட்டிருந்த 03 மோட்டார் சைக்கிள்களை பழுதுபார்ப்பதற்கோ, புறத்தொதுக்குவதற்கோ அல்லது வேறு நிறுவனமொன்றுக்கு உரிமை மாற்றம் செய்வதற்கோ அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கையை எடுப்பதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.	03 மோட்டார் சைக்கிள்களையும் கடமைகளுக்கான தேவைப்பாட்டின் அடிப்படையில் ஒதுக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
(ஆ)	மீளாய்வாண்டில் அலுவலர் ஒருவரால் சேதமடைந்த மடிக்கணியை மீண்டும் செயற்படும் நிலைக்கு (இயல்பு நிலைக்கு) கொண்டு வருவதற்குச் செலவான ரூ. 80,000 தொகையை அந்த அலுவலரிடமிருந்து	ரூ. 80,000 தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.	சேதமடைந்த மடிக்கணியை பழுதுபார்ப்பதற்குச் செலவான ரூ. 80,000 தொகையை அதனைப் பயன்படுத்திய அலுவலருக்குச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

	அறவிட்டுக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியாகும்போதும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		அவர் இந்த விடயம் தொடர்பாக மேன்முறையீடொன்றை முன்வைத்துள்ளதுடன், அந்த மேன்முறையீட்டுக்கான பதவிநிலைத் தீர்மானம் கிடைக்கப்பெற்றவுடன் அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது.
(இ)	ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்களினால் மாதாந்த பணித் திட்டமிடல் தயாரிக்கப்பட்டு அவற்றை தலைமை அலுவகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டுமென்பதோடு மாத இறுதியில் அந்த திட்டமிடப்பட்ட அலுவல்கள் நிறைவேற்றப்படல் சம்பந்தமான முன்னேற்ற அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆயினும் மாத்தறை பிராந்திய அலுவலகத்தினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பிராந்திய அலுவலகங்களினால் மாதாந்த பணித் திட்டமிடல் மற்றும் மாத இறுதியில் அது சம்பந்தமான முன்னேற்ற அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.	ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்களினால் மாதாந்த பணித் திட்டமிடல் தயாரிக்கப்பட்டு அவற்றை தலைமை அலுவகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டுமென்பதோடு மாத இறுதியில் அந்த திட்டமிடப்பட்ட அலுவல்கள் நிறைவேற்றப்படல் சம்பந்தமான முன்னேற்ற அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த அறிக்கைகள் உரிய பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்றனவா என்பது பற்றி தலைமை அலுவலகத்தினால் பின்தொடர் அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்ற குறைபாட்டை ஏற்றுக்கொள்வதோடு, எதிர்காலத்தில் அந்தக் குறைபாடுகளைத் தவிர்த்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அந்தக்

குறைபாட்டைத் தவிர்த்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு இணங்குகின்றேன்.

4. நல்லாளுகை

4.1 உள்ளகக் கணக்காய்வு

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை	தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து
2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவுக்கமைய தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரால் உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்குப் பொருத்தமான கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டு முதல் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவுக்கமைய உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.	ஆணைக்குழுவுக்கு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமித்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வு நடாத்தப்பட்டது. ஆணைக்குழுவின் கடமைகளுக்குப் பொருத்தமான ஒருவர் இல்லாதிருந்தமையின் காரணமாக ஆட்சேர்ப்புத் தாமதமாகியது. தற்போது ஆட்சேர்ப்புக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளமையின் காரணமாக இதற்காக உத்தியோகத்தர் ஒருவரை நியமித்துக்கொள்வதில் சிக்கல் நிலைமை தோன்றியுள்ளது.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை	தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து
2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுக்கமைய அனைத்து நிறுவனங்களுக்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று இருக்க வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டு முதல் ஆணைக்குழுவில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.	உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இல்லாமையின் காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படவில்லை.

5. மனித வளங்கள் முகாமைத்துவம்

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை	தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து
(அ)	மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளர் 2018 ஜனவரி 30 ஆம் திகதி கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்ததுடன், அது சம்பந்தமாக நடாத்தப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் அடிப்படையில் 2019 நவம்பர் 21 ஆம் திகதி செயலாளரின் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தது. ஆணைக்குழுவினால் 2020 ஆம் ஆண்டில் அது சம்பந்தமாக முறையான ஒழுக்காற்று விசாரணையை ஆரம்பித்திருந்தபோதிலும் கணக்காய்வுத் தினமாகும்போது சுமார் 02 வருட காலம் கடந்திருந்தாலும் ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.	முறையான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்தல் வேண்டும்.	நாட்டில் கொவிட் 19 தொற்று நோய் நிலைமைக்கு மத்தியில் சாட்சியாளர்களை சாட்சியமளிப்பதற்கு அழைப்பதில் சிரமங்களும் விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்தும் ஒத்தி வைக்கப்பட்டமையினால் காலம் நீடித்துள்ளது. இந்த விசாரணையை நிறைவு செய்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அறிவித்துள்ளதுடன், 03 மாதங்களுக்குள் நிறைவு செய்வதாக தற்போது உறுதியளிக்கப்பட்டுள்ளது.
(ஆ)	2021 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட ஆளணி அங்கத்தவர்களின் எண்ணிக்கை 235 ஆக இருந்ததுடன் ஆளணியில் உண்மையாக 144 அங்கத்தவர்களே இருந்தனர். 93 பதவி வெற்றிடங்கள் நிலவியதுடன், அதில் சிரேட்ட மட்டப் பதவிகள் 21, மூன்றாம் நிலை மட்டப் பதவிகள் 37 மற்றும் இரண்டாம் நிலை மட்டப் பதவிகள் 35 ஆகும். ஆரம்ப மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை விஞ்சி இரண்டு ஊழியர்கள் மேலதிகமாக காணப்பட்டனர். அதற்கமைய ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 40மூ வெற்றிடங்கள் நிலவின.	அத்தியாவசிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	இந்த வெற்றிடமாகியுள்ள பதவிகளில் 63 பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் கொள்கை ரீதியிலான காரணங்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.
(இ)	ஆணைக்குழுவுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள சிரேட்ட மட்ட ஆளணியில் 46 பதவிகள்	அத்தியாவசிய பதவிகளுக்கான வெற்றிடங்களை	இந்த வெற்றிடமாகியுள்ள பதவிகளில் 63 பதவிகளுக்கு விண்ணப்பங்கள்

இருப்பதுடன், உண்மையான எண்ணிக்கை 25 ஆகும். இதில் ஒரு அலுவலர் இரண்டாம் நிலை அடிப்படையிலும் மேலும் இருவர் ஒப்பந்த அடிப்படையிலும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அதற்கிணங்க ஆணைக்குழுவில் சிரேட்ட மட்டப் பதவிகளில் 24 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

கோரப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் கொள்கை ரீதியிலான காரணங்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எம்.சோமதிலக்க
பிரதிக் காணக்காய்வாளர் தலைமை அதிபதி,
காணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

திகதி: 2022.09.12

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (2) ஆவது பிரிவின் பிரகாரம் வருடாந்த விபரமான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை

02. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 39(1) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய முன்மொழியப்படும் தீர்வு நடவடிக்கைகள் அல்லது கவனத்திற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.

03. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 39(2) உப பிரிவின் பிரகாரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமான நடவடிக்கைகள் அல்லது விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல், நடைமுறைப்படுத்த முடியாமைக்கான காரணங்கள் பற்றிய அறிக்கையையும் இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

பிரதிகள்:
1. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர்.
2. செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (2) ஆவது பிரிவின் பிரகாரம் வருடாந்த விபரமான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை

1.2 நிதிக் கூற்றுக்கள் பற்றி கருத்துத் தெரிவித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை	எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
ஆணைக்குழுவுக்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களும் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருக்காமை.	சரியாகக் கணக்கில் பதிதல்.	மதிப்பீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

1.2.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

2. நிதி மீளாய்வு

2.1 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை	எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
(அ) 2016 மார்ச் மாதம் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை - 3.2 ஆம் பந்தி	அனைத்து நிதியாண்டுகளிலும் யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் இருப்புப் பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கையை தயாரித்து பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புதல்.	2021 ஆம் ஆண்டிற்காக 2022 யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்துப் பிராந்திய அலுவலகங்களினதும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், தலைமை அலுவலகத்தின் அறிக்கை (2022 யூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.)
(அ) 2016 மார்ச் மாதம் 31 ஆம் திகதிய 05.்.2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை - 3.2.5 ஆம் பந்தி	சகல நிதியாண்டுகளிலும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் பொது 47 இறுதி அறிக்கையை சமர்ப்பித்தல்.	இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
(ஆ) 1993 செப். மாதம் 21 ஆம் திகதிய 93.்.22 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை	விபத்துக்குள்ளான அலுவலர்களுக்கு இழப்பீட்டைச் செலுத்தல்	விபத்துக்குளாகிய ஆணைக்குழுவின் பெண் அலுவலர் ஒருவருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ. 308,700 செலுத்தப்பட்டுள்ளதுடன், கடமைத் தேவைப்பாட்டிற்காக அலுவலகத்திற்கு அழைப்பற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மாதாந்த போக்குவத்துப் படியொன்று செலுத்தப்பட்டுள்ளது. கடமைக்கான தேவைப்பாடு மற்றும் அவரது அங்கவீன நிலைமையின் அடிப்படையில் அவருக்கு போக்குவரத்துப் படி அங்கீகரழக்கப்பட்டுள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 அலுவல்களை நிறைவேற்றாமை.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை	எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
(அ) 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் கல்வி அமைச்சுடன் தொடர்பாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை.	பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.	• பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. • கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமை சம்பந்தமாக 2021.04.30 ஆம் திகமஹ்ரீதி கல்வி அமைச்சின் அலுவலர்களை அழைத்து விடயங்கள் வினவப்பட்டுள்ளதுடன், பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் 2021.05.07 ஆம் திகதி கல்வி அமைச்சின் செயலாருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. • 2022 செப்தெம்பர் மாதம் ஆணைக்குழுவுக்கு கல்வி அமைச்சின் செயலாளரை அழைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
(ஆ) 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் ஓய்வூதியத் திணைக்களத்துடன் தொடர்பாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை.	பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.	• குறித்த பரிந்துரைகளின் பிரதிவாதித் தரப்புக்களை அழைத்து விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது.
(இ) 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் இலங்கை பொலீஸுடன் தொடர்பாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை.	பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.	• 2021.01.27 ஆம் திகதி பொலீஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின்போது ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில்

		தாமதங்கள் நிலவுவதாகவும், எதிர்காலத்தில் அது தொடர்பாக முன்னுரிமை வழங்கி குறித்த பரிந்துரைகளை துரிதமாக நடைமுறைப்படுத்துமாறும், இது வரை நடைமுறைப்படுத்தியுள்ள பரிந்துரைகள் சம்பந்தமாக எமக்கு அறிவுறுத்துமாறும் பொலீஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. • 2022.02.03 ஆம் திகதி பொலீஸ் மா அதிபரின் கையொப்பத்துடன் இலங்கை பொலீஸின் அனைத்து பிரிவுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளை இந்த விடயம் தொடர்.பாக அறிவுறுத்துவதற்காக தொலைபேசி அழைப்பு விடுக்கப்பட்டு இதுவரை வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் சம்பந்தமாக அறிக்கையொன்றைப் பெற்றக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
(ஈ) மாத்தறை பிராந்திய அலுவலகத்தினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் புலனாய்வு அதிகாரியினால் அனுப்பப்பட்ட பணிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தெளிவற்றதாக இருந்தது.	அனைத்து விபரங்களையும் அறிக்கைகளில் குறிப்பிடுதல் வேண்டும்.	• குறித்த அலுவலர்களுக்கு வாய் மூலமாக தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.
(உ) கல்விசார் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும் அதன் மூலம் பொது மக்கள் விழிப்புணர்வில் அதிகரிப்பு ஏற்படாமை	பொது மக்களின் விழிப்புணர்வில் அதிகரிப்பு ஏற்படும் வகையில் கல்வி மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்	• நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக 2022 ஆம் ஆண்டில் வழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படாமையின்

	நடைமுறைப்படுத்தல்.	அடிப்படையில் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்கு முடியாவிட்டாலும் எதிர்காலத்தில் துரித நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
(ஊ) மாத்தறை பிராந்திய அலுவலகம் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும்போது 02 - 08 வருடங்களுக்கிடைப்பட்ட காலப் பகுதியினுள் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு பரிந்துரைகளைப் பெற்றுக்கொடுப்பதில் காணப்படும் தாமதங்கள்	முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தல் வேண்டும்.	• அனைத்துப் பிராந்திய அலுவலகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3.2 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை	எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
(அ) மகளிர் தின வைபவத்தின் புகைப்படங்கள் மற்றும் வீடியோ எடுத்தலை அரசாங்க பெறுகை வழிகாட்டியைப் பின்பற்றாமல் மேற்கொண்டமை	பெறுகை வழிகாட்டியை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	இற்றைப்படுத்தல் வேண்டும்.
(ஆ) மகளிர் தின வைபவத்தை நடாத்துவதற்காக பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தைப் பயன்படுத்தியமை மற்றும் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து உணவு பானங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை.	உணவக வசதிகள் அல்லாத உணவுகளுக்கும் விலை மனுக்கோரல் வேண்டும்	எதிர்காலத்தில் பெறுகை நடைமுறையை நடைமுறைப்படுத்துவதற்காக அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
(இ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6.1 (அ) (னை) பந்தியைப் பின்பற்றாமை.	பெறுகை வழிகாட்டியை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	அனைத்து அலுவலர்களும் அறிவுறுத்தப்பட்டு இற்றைப்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளல் சம்பந்தமாக அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

3.3 முகாமைத்துவ குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை	எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
(அ) வளவில் வைக்கப்பட்டிருந்த 03 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்காமை.	பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ளல்.	பழுதுபார்ப்பின் பின்னர் கடமைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.
(ஆ) சேதமடைந்த மடிக்கணினியை மீண்டும் செயற்படும் நிலைக்கு (இயல்பு நிலைக்கு) கொண்டு வருவதற்குச் செலவான ரூ. 80,000 தொகை.	அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	நிதிப் பிரமாணங்களுக்கமைய 60 தவணைகளில் அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வழங்கப்பட்ட தீர்ப்புக்கமைய தற்போது மாதாந்தம் சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்றது.
(இ) பிராந்திய அலுவலகங்களினால் மாதாந்த பணித் திட்டமிடல் தயாரிக்கப்படல். அவற்றை தலைமை அலுவகத்திற்கு சமர்ப்பித்தல். மாத இறுதியில் அந்த திட்டமிடப்பட்ட அலுவல்கள் நிறைவேற்றப்படல் சம்பந்தமான முன்னேற்றத்தைப் பரீட்சித்தல்.	சகல பிராந்திய அலுவலகங்களும் மாதாந்த பணித் திட்டமிடல் மற்றும் மாத இறுதியில் முன்னேற்றத்தை தலைமை அலுவலகத்திற்கு அறிக்கைப்படுத்தல்.	இற்றைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4. நல்லாளுகை

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை	எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவுக்கமைய உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்குப் பொருத்தமான கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவுக்கமைய உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டியிருத்தல்.	அலுவலர்களை ஆட்சேர்த்துக்கொள்வதில் சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டுள்ளமையினால் தற்காலிகமாக கணக்காளர் இந்த அலுவல்களை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை	எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுக்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை நியமித்தல்.	சட்டத்தின் குறித்த பிரிவுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல்.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. மனித வளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பரிந்துரை	எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
(அ) பணி நீக்கம் செய்யப்பட்ட ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளரின் ஒழுக்காற்று விசாரணை முடிவுறுத்தப்படாமை.	விசாரணை நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்தல் வேண்டும்.	தற்போது தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு துரிதமாக நிறைவு செய்வதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
(ஆ) ஆளணி வெற்றிடங்கள்	தேவையான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	அரசாங்கத்தின் கொள்கை, சட்ட ரீதியான காரணங்களின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. கடமைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக பட்டதாரி அலுவலர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.
(இ) ஆணைக்குழுவின் சிரேட்ட மட்டப் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாதிருத்தல்.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.	அரசாங்கத்தின் கொள்கை ரீதியான காரணங்களின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமையின் அடிப்படையில் இவ்வாறு இரண்டாம் நிலை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் அத்தியாவசிய அலுவலர்கள் மாத்திரம் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

2022 இல் ஆணைக்குழுவின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான குறுகிய கால மற்றும் இடைக்கால செயற்பாடுகள்

- பெருந்தோட்டத்துறை மக்களின் பிரவேசத்தை மேம்படுத்துவதற்காக இரத்தினபுரி மற்றும் நுவரெலியா பிரதேசங்களில் குறைந்தது இரண்டு பிராந்திய அலுவலகங்களை அமைத்தல்.

- ஆணைக்குழுவில் தற்போது நிலவும் ஆளணி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல்.

- தேசிய தடுப்பு பொறிமுறையை (NPM) தாபிப்பதனூடாக கைது செய்யப்பட்டிருக்கும்போது சித்திரவதை செய்வதனை தடுத்தல்.

- ஆணைக்குழுவுக்கான சர்வதேச தொடர்புகள் பிரிவு அமைத்தல்.

- கடந்த ஆண்டுகளில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிகழ்வுகள் சம்பந்தமாக ஆராய்வதற்கான பொறிமுறையொன்றை அறிமுகஞ் செய்தல்.

- மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுடனான தொடர்புகளைப் பலப்படுத்தல்.

- மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிகளினூடாக ஆளணியின் இயலளவை மேம்படுத்தல்.

- அவசர நிகழ்வுகள் மற்றும் நிலைமைகளை கண்காணித்தல் சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீடுகளைப் பலப்படுத்தல்

- தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுக்கான ஆசிய பசுபிக் ஒன்றியம் (APF), ஐக்கிய நாடுகள் அமைப்பின் முகவர் நிறுவனங்கள் மற்றும் ஏனைய ஆர்வம் காண்பிக்கும் சர்வதேச குழுக்களுடன் நெருங்கிய வகையிலான தொடர்புகளைக் கட்டியெழுப்புதல், சிறுபான்மை மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளைக் கவனத்திற்கொண்டு கருப்பொருள் சார்ந்த உப குழுக்களை மீண்டும் அமைத்தல்.

- மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கருத்தை ஊடக வெளியீடுகளினூடாக நிதமும் பிரச்சாரம் செய்தல்.